## (உ) பணம், வங்கித் தொழில் ஆகியவற்றின் அபிவிருத்திகள்

### 1. (அ) பண நிரம்பல் — முக்கிய போக்குகள்

1974 ஆம் ஆண்டில் பண நிரம்பல் ரூ. 1,680 இலட்சத்தினால் அல்லது 6.0 சத வீதத்தால் அதிகரித்திருக்கையில், முன்னைய ஆண்டில் இவ்வதிகரிப்பு ரூ. 2,960 இலட்சமாக அல்லது 12.0 சத வீதமாகக் காணப்பட்டது. இவ்வாண்டு முடிவிலான எண் தொகை 6 0 சத வீத மிதமான அதிகரிப்பைக் காட்டியபோதிலும், 1973 ஆம் ஆண்டிற்கான தொடர்பான மட்டத்திலும் பார்க்க மாதச் சராசரி மட்டப் பண நிரம்பல் 18.1 சத வீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. 1973 ஆம் ஆண்டின் முடிவில் காணப்பட்ட என்றுமில்லாத உயர்மட்டப் பணநிரம்பலுடன், ஒப்பிட்டு நோக்கியமையின் காரணத்தினால், 1974 ஆம் ஆண்டிற்கான பண நிரம்பல் விரிவானது 1973 ஆம் ஆண்டுடன் பார்க்கையில், குறைவான வீத வளர்ச்சியினைக் காட்டுகின்றது. அது மாத்திரமல்லாமல், 1974 ஆம் ஆண்டின் முடிவில் பண நிரம்பல் கணிசமானளவால் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை II (உ) 1 ஆனது, 1970–1974 ஆண்டு காலப்பகுதிக்கான, பண நிரம்பல் மட்டத்தினை மாதாந்த அடிப்படையில் காட்டுகிறது. 1974ஆம் ஆண்டில் பண நிரம்பலிற்கான மாதாந்த அதிகரிப்பு வீதம், கணிசமானளவால் உயர்வுற்றிருந்த பண்பினை அவதானிக்கக்கூடியதாக உளது. இவ்வாண்டின் முதற் காலாண்டுப்பகுதியில் பண நிரம்பலானது மிகத் துரிதமாக உயர்வடைந்ததுடன், குறிப்பாக மாச்சு மாதத்தில் ஏறக்குறைய ரூ. 2,249 இலட்சத்தால் அல்லது முன்னைய ஆண்டிற்கான இம்மாதத்தினுடன் ஒப்பிடுகையில், 8.0 சத வீதத்தால் அதிகரித்தது. இதுவே 1974 ஆம் ஆண்டிற்கான மாதங்களில் ஆகக் கூடிய அதிகரிப்பாகும். இவ்வதிகரிப்புப் பெருமளவுக்கு மத்திய வங்கியிலிருந்து அரசாங்கம் கடன் பெற்றமையும், வர்த்தக வங்கிக் கொடுகடன்களை நாடி அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் சென்றமையும், உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்கு, வர்த்தக வங்கிகள் நிதி வழங்கியமையும் காரணமாகலாம். குறிப்பாக உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழான கடன் ஒவ்வொரு ஆண்டும் யூன் மாதத்தில் உச்சக்கட்டத்தினை அடைந்தது. ஏப்பிரல் மாதத்தில் பண நிரம்பலானது ரூ. 1,370 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்ததுடன், இவ்வாண்டிற்கான ஆகப் பெரிதளவான மாதாந்த வீழ்ச்சியாகவும் காணப்பட்டது. இரண்டாம் காலாண்டுப் பகுதிக்கான பண நிரம்பல் விரிவு வீதமானது, முதலாம் காலாண்டுப் பகுதியினுடன் ஒப்பிடுமிடத்து குறைவாகக் காணப்பட்டபோதிலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து முழுத்தொகை மட்டம் உயர்வாகக் காணப்பட்டது, மூன்றாம் காலாண்டுப்பகுதியில் பண நிரம்பல் குறைவாகக் காணப்பட்டபோதிலும் இரண்டாம் காலாண்டுப்பகுதியிலும் கூடுதலாகவே காணப்பட்டது. இவ்வாண்டில் பண நிரம்பல் செத்தெம்பர் மாதத்தில் உயர் மட்டத்தினை அடைந்தது. இதற்கு காரணமாக தேறிய வெளிநாட்டு வங்கிச் சொத்துக்கள் அதிகரித்தமையும், அரசாங்கக் காசு நிலுவைகளிலான வீழ்ச்சியும் காரணமாகும். இறுதிக் காலாண்டுப்பகுதியில், வங்கித் தொழிற்பாட்டின் தேறிய வெளிநாட்டுச் சொத்தின்

## அட்டவணை (உ) 1

## பணநிரம்பல்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கால முடிவில் | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | சதவீத மாற்றம் 1970–71 | சதவீத மாற்றம் 1971–72 | சதவீத மாற்றம் 1972–73 | சதவீத மாற்றம் 1973–74 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சனவரி ... ... ... | 1,872 | 1,943 | 2,102 | 2,323 | 2,770 | + 3.8 | + 8.2 | + 10.5 | + 19.2 |
| பெப்புருவரி .. ... .. | 1,884 | 1,973 | 2,086 | 2,242 | 2,805 | + 4.7 | + 5.7 | + 7.5 | + 25.1 |
| மாச்சு ... ... .. | 1,932 | 2,050 | 2,104 | 2,410 | 3,030 | + 6.1 | + 2.6 | + 14.5 | + 25.7 |
| எப்பிறல் ... ... .. | 1,942 | 2.101 | 2.152 | 2,464 | 2,893 | + 8.2 | + 2.4 | + 14.5 | + 17.4 |
| மே ... ... .. | 1.974 | 2,120 | 2,144 | 2,436 | 2,801 | + 7.4 | + 1.1 | + 13.6 | + 15.0 |
| யூன் ... ... ... | 1,990 | 2.150 | 2,161 | 2,499 | 2,925 | + 8.0 | + 0.5 | + 15.6 | + 17.0 |
| யூலை ... ... .. | 1.983 | 2,134 | 2,110 | 2,444 | 2,974 | + 7.6 | — 1.1 | + 15.8 | + 21.7 |
| ஓகத்து .. ... .. | 2,017 | 2,143 | 2,155 | 2,483 | 2.997 | + 6.2 | + 0.6 | + 15.2 | + 20.7 |
| செத்தெம்பர் .. ... ... | 2,066 | 2,149 | 2,340 | 2,600 | 3,126 | + 4.0 | + 8.9 | + 11.1 | + 20.2 |
| ஒற்றோபர் .. .. ... | 2,068 | 2,175 | வி. கி.* | 2,612 | 3,114 | + 5.2 | வி. கி.* | வி. கி.* | + 19.2 |
| நவெம்பர் ... .. ... | 1,927 | 2,140 | வி. கி.* | 2,663 | 3,008 | + 11.0 | வி. கி.* | வி. கி.* | + 13.0 |
| திசெம்பர் ... ... ... | 1,967 | 2,149 | 2,481 | 2,778 | 2,946 | + 9.3 | + 15.4 | + 12.0 | + 6.0 |
| மாதாந்தச் சராசரி ... ... | 1,969 | 2,102 | 2,183 | 2,496 | 2,949 | + 6.7 | + 4.4 | + 13.0 | + 18.1 |

* வர்த்தக வங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தத்தினல் எண்தொகைகள் கிடைக்கத்தக்கனவாயில்லை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

துரித வீழ்ச்சியினாலும், வங்கித் தொழிற்பாட்டிலிருந்து, அரசாங்கம் பெற்ற கடன்பாடுகள் குறைவடைந்தமையினாலும், பண நிரம்பல் கணிசமானளவால் வீழ்ச்சியடைந்தது. அத்துடன் 1973 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 1974ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் 6.0 சத வீதத்தால் உயர்ந்து காணப்பட்டது.

1974 ஆம் ஆண்டிற்கான பண நிரம்பலிற் காணப்பட்ட தளம்பல் அமைப்பானது முன்னைய ஆண்டிலிருந்து பெரிதளவால் வேறுபட்டிருந்தது. பண நிரம்பலானது 1973 ஆம் ஆண்டில் யூன் மாதத்தில் உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழான நெற் கொள்வனவுக்கு நிதி வழங்கியமையால் மிக உயர்ந்த மட்டத்தினை அடைந்தது. மேலும், பண நிரம்பலானது, அவ்வாண்டில் திசெம்பர் மாதத்தில், வர்த்தக வங்கிகளிடம் இருந்து கமக்காரருக்கு பயிர்ச்செய்கைக் கடன்கள் வழங்கியமையில் அதிகரிப்பு ஏற்பட்டமையினாலும், வங்கித் தொழிற்பாட்டிலிருந்து அரசாங்கம் பெற்ற கடன்பாடுகளின் தொகை அதிகரித்தமையினாலும் திரும்பவும் உன்னத கட்டத்தை அடைந்தது 1974 ஆம் ஆண்டு பண நிரம்பலில் ஏற்பட்ட மாற்றமானது, பெரும்போக காலத்தில் விவசாயக் கடன்கள் அதிகரித்தல் போன்ற பருவக் காரணிகளால் ஏற்படாமல் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் ஏனைய தனியார் துறையைச் சேர்ந்த வாடிக்கைக்காரர்களினதும் பருவமற்ற கடன் தேவைகளால் தான் ஏற்பட்டது. மாச்சு மாதத்தில் பண நிரம்பலானது பெரிதளவாக அதிகரித்தமைக்கு அரசாங்கத்திற்கும், கூட்டுத்தாபனங்களுக்கும் வழங்கப்பட்ட கடன்கள் அதிகரித்தமையே முக்கிய காரணமென் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கு எதிர்மாறாக, இறக்குமதி செய்யப்பட்ட அரிசியைக் களஞ்சியப்படுத்துவதற்குக் கிட்டங்கிகளைப் பயன்படுத்தவேண்டியமையினால், உணவு ஆணையாளரது திணைக்களத்தினால் குறைந்த அளவு வீதத்தால் கொள்வனவு செய்யப்பட்டமையினாலும், 1973 ஆம் ஆண்டிலும் பார்க்க 1974 ஆம் ஆண்டில் நெற் கொள்வனவுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களை திருப்பிக்கொடுப்பதில் தாமதமிருந்தமையினால் கொடுகடன்களின் அளவில் பருவகால வீழ்ச்சி ஏற்பட்டது. 1974 ஆம் ஆண்டில் முற்பணங்களை மீளக் கொடுப்பனவு செய்வதில் வழக்கமான அமைப்புக் காணப்பட்டிருந்ததால், மூன்றும் காலாண்டுப் பகுதியில் பண நிரம்பலில் குறைந்தவீத வளர்ச்சி காணப்பட்டிருக்கலாம்.

அத்தோடல்லாமல் அரசாங்கத்தின் நிதி தொடர்பான கொடுக்சல்வாங்கல்களினால் நாலாவது காலாண்டில் ஏற்படுகின்ற வழக்கமான பண நிரம்பல் விரிவானது ஏற்பட்டமையினால் 1974 ஆம் ஆண்டிற்கான பண நிரம்பலின் தளம்பல் முன்னைய ஆண்டுகளிலிருந்து வேறுபட்டிருந்தது. உண்மையில், இறுதிக் காலாண்டில், அரசாங்கத்துறையின் இயக்கங்கள் பண நிரம்பலின் மட்டத்தில் கணிசமானளவு வீழ்ச்சிக்குப் பெரும் பங்கு வகித்தது. 1974ம் ஆண்டில் பண நிரம்பலில் அசைவுகளுக்கு வங்கித் தொழிற்பாட்டின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்களும் முக்கிய நிர்ணயிக்கும் காரணிகளாக விளங்கின. தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களிலான வீழ்ச்சி. முதற் காலாண்டுப் பகுதியில் உள்நாட்டுக் கொடுகடன் உருவாக்கத்தின் விரிவுத் தாக்கலை தடுக்க முனைவுற்றது. அதேநேரத்தில் இறுதிக் காலாண்டில் இக்

காரணி, கொடுகடனில் ஏற்பட்ட சுருக்கத்தினைப் பலப்படுத்தியது. மேலும், இரண்டாம், மூன்றாம் காலாண்டுப்பகுதிகளில், வெளிநாட்டுச் சொத்துக்களின் மாற்றங்களினால், பண நிரம்பலில் ஏற்பட்ட தாக்கங்கள் குறிப்பிடத்தக்கன வாயில்லை. மேலும் 1973 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 1974 ஆம் ஆண்டில் பண நிரம்பல் மட்டத்தினை 1974 ஆம் ஆண்டு மே மாதம் நடைமுறைக்கு வந்த உள்நாட்டுக் கொடுகடன் உச்ச வரம்பும் பாதிக்க முனைந்தது.

*1. (ஆ)* **பண நிரம்பலைப் பாதிக்கும் காரணிகள்**

பண நிரம்பலைப் பாதிக்கும் காரணிகளின் பகுப்பாய்வு அட்டவணை II (உ) 2 ல் தரப்பட்டுள்ளது

1974 ஆம் ஆண்டில் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் மிகக் கூடுதலான பணக்குறைவு பதிவுசெய்யப்பட்டது. முன்னைய ஆண்டிலும்பார்க்க உள்வரும் உதவிகள் கூடுதலாக இருந்தபோதிலும், அவை நடைமுறைக் கணக்கின் பணக்குறைவில் 1/3 பகுதிக்கு நிதியீட்டம் செய்வதற்கே போதுமானதாக இருந்தது. எனவே மீதியாக இருந்த பணக் குறைவானது, வெளிநாட்டுச் சொத்துக்களைக் குறைப்பதன்மூலமும், மேலதிக வெளிநாட்டு வங்கி மொத்தக் கடன்கள் எடுப்பதன் மூலமும் நிதியீட்டம் செய்யப்பட்டது. இவ்வாறாக, வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களில் ஏற்பட்ட ரூ. 1792 இலட்சம் (தேறிய) வீழ்ச்சி அதேயளவு தொகையான பண நிரம்பலில் சுருக்கத்தினை ஏற்படுத்தியது. மறுபுறத்தில் 1973 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பானது, பண நிரம்பலில் ரூ. 3503 இலட்சம் விரிவு ஏற்படக் காரணமாயிற்று. மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 2,789 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றமையும் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் செலாவணி இருப்புக்கள் ரூ. 997 இலட்சத்தால் அதிகரித்தமையும் 1974 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியைக் காட்டுகிறது. மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சி, வங்கியுடன், பன்னாட்டு நிறுவனங்களின் வைப்புக்கள் ரூ. 2,017 இலட்சத்தால் அதிகரித்தமையாலும், வெளிநாட்டில் செய்த கடன்பாடுகள் ரூ. 167 இலட்சத்தால் அதிகரித்தமையாலும், வெளிநாட்டில் இருந்த பணமும் நிலுவைகளும் ரூ. 664 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றமையாலும் பிரதிபலிக்கப்பட்டது. வங்கியற்ற வெளிநாட்டு மொத்த பொறுப்புக்களான, குறுங்காலக் கொடுகடன்கள், நிரம்பல்கள் ஆகியவற்றின் அதிகரிப்புக்கள் இருந்திருக்காவிடின், மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சி கூடுதலாக இருந்திருக்கலாம். மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் இவ்வாண்டுகாலத்தில் பெரியளவில் வீழ்ச்சியடைந்த அதே வேளையில் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் செலாவணி உடைமைகள் ரூ. 997 இலட்சத்தால் அதிகரித்தன. வர்த்தக வங்கிகளின் ஏற்றுமதி உண்டியல்களின் ரூ. 1,017 இலட்ச அதிகரிப்பு காணப்பட்டது. மேலும் வெளிநாட்டில் வங்கித்தொழில் நிறுவனங்களில் இருந்த பணம் ரூ. 45 இலட்சத்தால் ஓரளவு வீழ்ச்சியுற்றதுடன் வெளிநாட்டுக் கடன்பாடுகள் ரூ. 34 இலட்சத்தால்

அட்டவணை II (உ) 2

## பண நிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்களும் அடிப்படைக் காரணிகளும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| பண நிரம்பலைப் பாதிக்கும் காரணிகள் | 1969 இறுதி/1970 இறுதி விரிவுக் காரணிகள் | 1969 இறுதி/1970 இறுதி சுருக்கக் காரணிகள் | 1970 இறுதி/1971 இறுதி விரிவுக் காரணிகள் | 1970 இறுதி/1971 இறுதி சுருக்கக் காரணிகள் | 1971 இறுதி/1972* இறுதி விரிவுக் காரணிகள் | 1971 இறுதி/1972* இறுதி சுருக்கக் காரணிகள் | 1972* இறுதி/1973 இறுதி விரிவுக் காரணிகள் | 1972* இறுதி/1973 இறுதி சுருக்கக் காரணிகள் | 1973 இறுதி/1974 இறுதி விரிவுக் காரணிகள் | 1973 இறுதி/1974 இறுதி சுருக்கக் காரணிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. வங்கியின் வெளிநாட்டுஇருப்புச் சொத்துக்கள் (தேறிய) ... | — | 1.5 | 200.5 | — | 80.4 | — | 350.3 | — | — | 179.2 |
| 2. தனியார் துறை† ... ... ... ... | 219.4 | 238.3 | 152.6 | 228.8 | 455.4 | 332.9 | 349.7 | 160.8 | 1071.7 | 538.5 |
| (அ) கூட்டுறவு நிறுவனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ... | 146.3 | — | — | 3.4 | 90.7 | — | — | 9.9 | 189.1 | — |
| (ஆ) ஏனைய தனியார் துறைப் பகுதிகளுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் | — | 42.0 | 84.1 | — | 132.5 | — | 131.5 | — | 241.1 | — |
| (இ) கூட்டுறவு நிறுவனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | — | 7.6 | — | 11.9 | — | 1.7 | — | 6.7 | — | 5.4 |
| (ஈ) ஏனைய தனியார் துறைப் பகுதிகளின் தவணை சேமிப்பு வைப்புக்கள் | — | 188.7 | — | 132.0 | — | 234.2 | 114.2 | — | — | 219.8 |
| (உ) வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் (தேறிய) ... ... ... ... | 12.4 | — | — | 81.5 | — | 97.0 | 94.6 | — | — | 292.2 |
| (ஊ) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் | 43.2 | — | 62.3 | — | 203.6 | — | — | 144.2 | 641.5 | — |
| (எ) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | 17.5 | — | 6.2 | — | 28.6 | — | 9.4 | — | — | 21.1 |
| 3. அரசாங்கத் துறை ... ... ... ... | 349.8 | 244.6 | 181.2 | 127.7 | 441.8 | 293.6 | 186.1 | 435.2 | 99.5 | 360.8 |
| (அ) வர்த்தக வங்கிகள் வசமுள்ள இறைசேரி உண்டியல்கள், அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள், அரசாங்க இறக்குமதி உண்டியல்கள் ஆகிய உடைமைகள் | 193.4 | — | 52.8 | — | 52.9 | — | — | 246.3 | — | 112.9 |
| (ஆ) அரசாங்கக் கணக்கில் கொள்வனவு செய்யப்பட்ட பண விடயங்கள் ... | 0.7 | — | — | 3.5 | 76.5 | — | — | 44.7 | 0.1 | — |
| (இ) மத்திய வங்கி வசமுள்ள இறைசேரி உண்டியல்கள், அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகள் ஆகிய உடைமைகள் ... | 126.2 | — | — | 19.7 | 189.3 | — | 81.6 | — | 57.6 | — |
| (ஈ) மத்திய வங்கி முற்பணங்கள் ... ... | 29.5 | — | 61.0 | — | 22.0 | — | 36.5 | — | 41.8 | — |
| (உ) மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் (தேறிய) | — | 120.4 | — | 104.5 | 101.1 | — | — | 144.2 | — | 128.1 |
| (ஊ) வங்கித் துறையிடமுள்ள அரசாங்க வைப்புக்களும், இறைசேரியிலும், கச்சேரியிலும் உள்ள பண நிலுவைகளும் .. ... | — | 124.2 | 67.4 | — | — | 293.6 | 68.0 | — | — | 119.8 |
| 4. இடைப்போக்கிலுள்ள விடயங்களின் சீராக்கங்கள் .. .. | — | 1.1 | 4.7 | — | — | 19.2 | 6.5 | — | 75.1 | — |
| மொத்த விரிவு/சுருக்கக் காரணிகள் ... ... .. | 569.2 | 485.5 | 539.0 | 356.5 | 977.6 | 645.7 | 892.6 | 596.0 | 1246.3 | 1078.5 |
| பண நிரம்பலில் ஏற்பட்ட மாற்றம் | +83.5 | | +182.5 | | + 332.0 | | + 296.6 | | + 167.8 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

† கழிவுபட்ட ஏற்றுமதி உண்டியல்களின் வெளிநிற்கும் பெறுமதி, வங்கியின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் கீழ் அடக்கப்பட்டுள்ளது.

* 1972 செத்தெம்பர் 1 நிற் தொடங்கி 1972 திசெம்பர் 17 வரை வர்த்தக வங்கி ஊழியர்களால் நடாத்தப்பட்ட வேலை நிறுத்தம் காரணமாக 1972ன் திசெம்பர் முடிவு எண் தொகைகள் சரியானவையாக அமையவில்லை.

வீழ்ச்சியடைந்தது. 1974 ஆம் ஆண்டு இலங்கை ஏற்றுமதிகளின் விலைகள் அதிகரித்தமையினால்தான், வர்த்தக வங்கிகளிடமிருந்த ஏற்றுமதி உண்டியல்களின் அளவில் மிகப் பெரிய விரிவு ஏற்பட்டது. இந்த சொத்துக்களை அதிகரிப்பதற்கு விளங்கிய ஏனைய காரணிகளாக வர்த்தக வங்கிகள் இவ்வுண்டியல்களை பணமாக மாற்றாமல் உண்டியல் பட்டியல்கள் முதிர்ச்சியடையும்வரை வைத்திருப்பதற்குத் தூண்டுதலாக வெளிநாட்டிலுள்ள உயர்ந்த கழிவு வீதங்களும், இவ்வுண்டியல்களைப் பணமாக மாற்றும், வசதிகள் 4 மாதத்திலிருந்து 6 மாதங்களாகக் கூட்டியமையும் விளங்குகின்றன.

அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளடங்கிய தனியார் துறையின் அதிகரித்த கொடுகடன் தேவைகள் பண நிரம்பலில் ரூ. 5,332 இலட்சத் தேறிய விரிவினை ஏற்படுத்தின. கடந்த ஆண்டில் இத் துறையின் தொழிற்பாடுகளினால் பண நிரம்பலில் ஏற்பட்ட தேறிய விரிவுத் தாக்கமானது ரூ. 1,889 இலட்சமாகக் காணப்பட்டது. மேலும், தனியார் துறையில் பண விரிவு ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின் முன்றுமில்லாத அளவு கடன்பாடுகள் உயர்வான மட்டமான ரூ. 6,415 இலட்சமாக அதிகரித்தமை காரணமாகும். எவ்வாறாயினும், ரூ. 211 இலட்சத்தால் வங்கியிலுள்ள தவணை, சேமிப்பு வைப்புகள் உயர்வடைந்தமையால், ஓரளவில் குறைவடைந்தது. 1973 ஆம் ஆண்டில் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் தொழிற்பாடுகள் ரூ. 1,348 இலட்ச சுருக்கத்தினை ஏற்படுத்தின. இவ்வாறு வங்கிக் கொடுகடன் பெருமளவால் அதிகரிப்பதற்கு கூட்டுத்தாபனங்களின் இறக்குமதிகளின் விலைகள் கணிசமானளவால் அதிகரித்தமையும், பெருந்தொகையான மூலப்பொருட்களுக்கு நிதி வழங்கியமையும் சில கூட்டுத்தாபனங்களின் இயக்கத்தின் விளைவாக ஏற்படும் நட்டங்களுக்கு நிதி வழங்கவேண்டிய தேவை ஏற்பட்டமையும், காரணமாகும்.

மேலும், வர்த்தக வங்கிகளினால் ஏனைய தனியார் துறையினைச் சார்ந்த வாடிக்கைக்காரர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடனானது 1974 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ரூ. 2,411 இலட்சத்தால் அதிகரித்தது எனினும், ஏனைய தனியார் துறையைச் சார்ந்த வாடிக்கைக்காரர்களுக்கு சொந்தமான தவணை, சேமிப்பு வைப்புக்கள் ரூ. 2,198 இலட்சத்தால் அதிகரித்ததுடன், இத்துறையில் தேறிய விரிவாக ரூ. 213 இலட்சத்தினை ஏற்படுத்தியது. 1973 ஆம் ஆண்டில் ஏனைய தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் அதிகரிப்பானது ரூ. 2,457 இலட்சப் பண விரிவினை ஏற்படுத்தியதுடன், இது அவர்களுடைய தவணை, சேமிப்பு வைப்புக்களின் அளவில் ஏற்பட்ட கணிசமான குறைவினையும் கொண்டிருந்தது. மேலும் வங்கியினது இந்த வகுப்பிலுள்ள வாடிக்கைக்காரர்களினது கொடுகடன் தேவையானது, 1974 ஆம் ஆண்டில் இரண்டு மடங்கிற்கு மேலாக அதிகரித்தபோதிலும் தவணை சேமிப்பு வைப்புக்களின் இருப்புக்கள் அதிகரிப்புக்களால் பெருமளவுக்கு எதிரீடு செய்யப்பட்டது.

இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளிடம் இருந்து கூட்டுறவு நிறுவனங்கள் பெற்ற கடன்பாடுகள் ரூ. 1,891 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில் வங்கியிடமான தவணை சேமிப்பு வைப்புக்கள், ரூ. 54 இலட்சத்தால் அதிகரித்தமையால் தேறிய விரிவு ரூ. 1,837 இலட்சமாக உளது. அரசாங்கமானது,

பயிர்ச் செய்கைக் கடன்கள் பெருமளவுக்கு விவசாயிகளுக்கு வழங்கவேண்டும் என்று எடுத்த தீர்மானத்தின்படியும், இவ்வாண்டு முடிவில் வெளிநின்ற நிலுவைகளான உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழான கொள்வனவுக்கான பெருமளவு தொகையான கடன்கள் காரணமாகவும் வர்த்தக வங்கிகளினல் கூட்டுறவுத் தாபனங்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் கூடுதலாக அதிகரித்தது.

அரசாங்கத் துறைக்கான நிதி தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் முன்னைய ஆண்டைப்போலவே பண நிரம்பலில் *1973* ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூ. *2491* இலட்சம் தேறிய சுருக்கத்தினைப்போல், *1974* ஆம் ஆண்டில் ரூ. *2713* இலட்சமாக விளங்கியது. அரசாங்கமானது, மத்திய வங்கியிடமிருந்து பெற்ற கடன்பாடுகள் ரூ. *994* இலட்சமாக அதிகரித்த வேளையில் வர்த்தக வங்கிகளின் உதவிகள் ரூ. *1,128* இலட்சமாகக் குறைக்கப்பட்டன. இவ்வாறு வர்த்தக வங்கிகளினல் ஏற்பட்ட சுருக்கமான வங்கித் தொழிலில் அரசாங்கத்தின் வைப்புக்கள் கணிசமானளவு அதிகரித்தமையால் மேலும் பலப்படுத்தப்பட்டது. மேலும். கச்சேரிகளிலும் திறைசேரிகளிலும் காணப்பட்ட பண நிலுவைகள் ரூ. *1198* இலட்சத்தால் அதிகரித்தது. மேலும், மத்திய வங்கியில் காணப்பட்ட (தேறிய) ஏனைய மொத்தக் கடன்களிலும், கணக்குகளிலும் காணப்பட்ட மாற்றங்களும் ரூ. *1281* இலட்சங்கள்கொண்ட சுருக்க விளைவினை ஏற்படுத்தக் காரணமாயின. இவ்வாண்டில் அரசாங்கமானது, வரவுசெலவுத் திட்டத்தில் உள்ள இயங்குகின்ற தேறிய காசுக் குறைவினை நிதியீட்டஞ்செய்வதற்கு பண வீக்க மற்ற நிதி மூலங்களிலிருந்து குறிப்பாகச் சேமிப்பு நிறுவனங்களின் நிதியிலிருந்து பெற்றமையால் மொத்தத்தில் நோக்குமிடத்து, அரசாங்க வரவுசெலவுத் திட்ட தொழிற்பாடுகள் சுருக்கத் தாக்கத்தினைக் கொண்டிருந்தன. சுருக்கமாகக் கூறுமிடத்து *1974* ஆம் ஆண்டில் ஏற்பட்ட *6* சத வீதப் பண விரிவிற்கு அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினல் பெறப்பட்ட உயர்மட்டக் கடன்பாடுகளே காரணமாகும். அத்துடன் ஏனைய தனியார் துறையானது, இவ்வாண்டில் பெருமளவு தொகையைக் கடனகப் பெற்றபோதிலும், ஏனைய தனியார் துறையினைச் சார்ந்த வாடிக்கைக்காரர்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் பெருமளவு அதிகரித்தமையால் பண விரிவுற்கு இது வகித்த பங்கானது ஒப்பிட்டு நோக்குமிடத்து சிறியதாகும். மேலும், வெளித்துறையும், அரசாங்கத் துறையும் சுருக்கத்தினை ஏற்படுத்தியபோதிலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினல் ஏற்பட்ட பெரிய விரிவினை எதிரீடு செய்வதற்கு இவை சிறிதாகவும் போதியதற்றதாகவும் காணப்பட்டது.

**1. (இ) வங்கியற்ற தனியார் துறையிலான திரவத் தன்மை**

*1971 – 74* ஆம் ஆண்டிற்கான வங்கியற்ற தனியார் துறையின் அடிப்படையான, இரண்டாந்தரமான திரவச் சொத்துக்களின் பரம்பல் அட்டவணை II (உ) 3இல் காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை II (உ) 3

## வங்கியல்லாத் தனியார் துறையின் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள்

| விபரம் | மொத்தம் (பத்து இலட்சம் ரூபாய்களில்) 1971 திசெம்பர் | 1972 திசெம்பர் | 1973 திசெம்பர் | 1974 திசெம்பர் | மொத்த தேசிய உ. இன் சதவீதம் (அ) 1971 திசெம்பர் | 1972 திசெம்பர் | 1973 திசெம்பர் | 9974 திசெம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. முதன்மைத் திரவ இருப்புச் சொத்துக்கள் ... | | | | | | | | |
| (அ) நாணயங்களும், குத்திகளும் .. | 1,115.3 | 1,202.3 | 1,436.7 | 1,539.3 | 9.5 | 9.5 | 9.5 | 7.8 |
| (ஆ) கேள்வி வைப்புக்கள் ... ... | 1,033.8 | 1,278.8 | 1,341.0 | 1,406.3 | 8.8 | 10.1 | 8.8 | 7.1 |
| மொத்தம் ... ... | 2,149.1 | 2,481.1 | 2,777.7 | 2,945.6 | 18.2 | 19.6 | 18.3 | 15.0 |
| சதவீத மாற்றம் ... .. | + 0.3 | +15.1 | +11.9 | + 6.0 | | | | |
| 2. இரண்டாந்தர திரவ இருப்புச் சொத்துக்கள் .. | | | | | | | | |
| (அ) வர்த்தக வங்கிகளிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் .. | 614.4 | 609.6 | 748.8 | 856.5 | 5.2 | 4.8 | 4.9 | 4.3 |
| (ஆ) அஞ்சல் அலுவலகச்சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் ... | 659.5 | — | — | — | 5.6 | — | — | — |
| (இ) இலங்கைச் சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் . | 197.7 | — | — | — | 1.7 | — | — | — |
| (ஈ) தேசிய சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் ... | — | 913.0* | 988.8* | 1,170.4* | — | 7.2* | 6.5* | 5.9* |
| (உ) வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை வைப்புக்கள் ... ... | 671.4 | 914.4 | 627.4 | 766.0 | 5.7 | 7.3 | 4.1 | 3.9 |
| (ஊ) தேசிய சேமிப்பு வங்கியிடமுள்ள தவணை வைப்புக்கள் | — | 53.6 | 102.3 | 171.1 | — | 0.4 | 0.7 | 0.9 |
| (எ) குடியிருப்போரின் அந்நிய நிலுவைகள். | — | — | — | — | — | — | — | — |
| (ஏ) சேமிப்புச் சான்றிதழ்கள் ... ... | 65.3 | 65.2 | 98.0 | 106.9 | 0.6 | 0.5 | 0.6 | 0.5 |
| (ஐ) இறைவரி உண்டியல்கள் ... .. | 13.3 | 10.0 | 5.8 | 4.7 | 0.1 | ... | ... | ... |
| (ஒ) வரி ஒதுக்கு நிதிச் சான்றிதழ்கள் ... | 53.1 | 61.7 | 55.9 | 51.7 | 0.4 | 0.5 | 0.4 | 0.3 |
| (ஓ) அரசாங்க முறிகள் .. ... | 1,148 7 | 1,248.6 | 1,368.0 | 1,492.6 | 9.7 | 9.9 | 9.0 | 7.6 |
| மொத்தம் ... ... ... | 3,423.4 | 3,876.1 | 3,996.0 | 4,619.9 | 29.0 | 30.6 | 26.4 | 23.5 |
| சதவீத மாற்றம் .. ... | + 6.2 | + 8.4 | + 3.0 | +15.6 | | | | |
| 3. தனியார்துறையின் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள் ... ... | 5,572.5 | 6,357.2* | 6,773.7* | 7,565.5* | 47.3 | 50.2* | 44.7* | 38.4 |
| சதவீத மாற்றம் ... ... .. | + 3.8 | +10.9 | + 6.8 | +11.7 | | | | |
| அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கி, இலங்கைச் சேமிப்பு வங்கி, ஊழியர் சேமநிதி போன்ற நிதித் தாபனங்கள் வசமுள்ள இறைசேரி உண்டியல்கள், அரசாங்க முறிகள் ஆகியவற்றின் உடைமைகள், மேலே சேர்க்கப்படவில்லை ... .. .. | 2,735.6 | 3,117.7 | 3,759.7 | 4,456.4 | 23.2 | 24.6 | 24.8 | 22.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* தற்காலிகமானவை. 1 நிலையான வைப்புக்களையும் உள்ளடக்கும்.

(அ) நடைமுறைச் சினைக்கொள் விலைகளின்படி.

1974 ஆம் ஆண்டில் வங்கியற்ற தனியார் துறையின் மொத்தத் திரவச் சொத்துக்கள் ரூ. 7,918 இலட்சத்தால் அல்லது 11.7 சத வீதத்தால் அதிகரித்துக் காணப்பட 1973 ஆம் ஆண்டில் இவ்வதிகரிப்பு ரூ. 4,348 இலட்சங்கள் அல்லது 6.8 சத வீதமாக விளங்கியது. இவ்விரிவில் காணப்பட்ட முக்கிய மாற்றமென்னவெனில், ரூ. 1,678 இலட்சம் அல்லது 6.0 சதவீத மிதமான அதிகரிப்பை அடிப்படைத் திரவச் சொத்துக்களிலும் (தாள்கள், நாணயங்கள், கேள்வி வைப்புக்கள்) ரூ. 6,2ㅇ9 இலட்சங்கள் அல்லது 15.6 சதவீத இரண்டாந்தர திரவச் சொத்துக்களுக்கான கணிசமான வளர்ச்சியுமாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக அடிப்படைத் திரவத்தில் பதிவுசெய்யப்பட்ட பெரிய அதிகரிப்புப் போக்குடன் மேற்கூறிய அபிவிருத்திகள் மாறுபட்டுக் காணப்படுகிறது.

60 சத வீதத்திற்கு மேலான அதிகரிப்பு மக்களிடமான தாள்கள், நாணயக் குத்திகள் வடிவத்தில் ஏற்பட்டமை அடிப்படைத் திரவச் சொத்துக்களில் ஏற்பட்ட ஏமாற்றம் தரும் பண்பாக விளங்குகின்றது. இதன் விளைவாக, அடிப்படைத் திரவத்தில் உள்ள நாணயத்தில் பங்கு 52.3 சத வீதத்தால் அதிகரித்தவேளையில், கேள்வி வைப்புக்கள் அதே யளவால் வீழ்ச்சியடைந்தன. அட்டவணை II (உ) 4 கடந்த பல ஆண்டுகளாக கேள்வி வைப்புக்களிலும் பார்க்க நாணயங்களுக்கு மக்களிடமிருந்த அதிகரித்த விருப்பமானது, 1970 ஆம் ஆண்டு நாணய மதிப்பிறக்கம் செய்முறையினுல் கட்டுப்படுத்தப்பட்டது. எனினும், அதன்பின்னர், 1972 ஆம் ஆண்டு தவிர இப்போக்கானது, மீண்டும் எழுந்தது. இந்நிலைமையானது, மொத்த வங்கிகளின் வங்கிக் கிளைகளால் 1972 ஆம் ஆண்டில் இருந்த 204 நடைமுறைக் கணக்கு வசதிகள் 1974ஆம் ஆண்டில் 457 ஆகக் கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்தமையால், மேலும் மோசமாகியது. மக்கள் பணத்தினை விரும்புவதற்கான வழக்கமான காரணங்களைத்தவிர, வங்கிப் பற்று வரியும் நடைமுறையிலுள்ள பண வீக்க நிலையும் இப்போக்கினை மேலும் அதிகரித்திருக்கக்கூடும்.

அடிப்படைத் திரவச் சொத்துக்களில் நாணயங்களின் அளவு அதிகரிப்புடன், அட்டவணை II (உ) 5 ல் காட்டப்பட்டவாறு ரூ. 100/-, ரூ. 50/- பெறுமதிகொண்ட தாள்களின் பங்களவிலும் மாற்றம் ஏற்பட்டது. அண்மைக் காலங்களில் இவற்றின் பங்கு பெருமளவு அதிகரித்ததுடன் 1974 ஆம் ஆண்டில் இப்பங்கு நாணய வெளியீட்டில் 67 சத வீதமாக விளங்கியது.

ஏற்கெனவே கவனிக்கப்பட்டதுபோல, 1974 ஆம் ஆண்டில் பெருமளவு அதிகரிப்பு இரண்டாந் தரத் திரவச் சொத்துக்களில் ஏற்பட்டதினுலாகும். அதிகரித்த ரூ. 6239 இலட்சத்தில் ரூ. 4967 இலட்சங்கள் அல்லது 75 சத வீதம் கிட்டத்தட்ட வர்த்தக வங்கிகளினுலும், தேசிய சேமிப்பு வங்கிகளினுலும் தவணை, சேமிப்பு வைப்புக்களாகச் சேர்க்கப்பட்டன. அரசாங்க முறிகள், சேமிப்புச் சான்றிதழ்கள் என்பவற்றின் கையிருப்புக்கள் முறையே, ரூ. 1,246 இலட்சங்களாலும், ரூ. 86 இலட்சங்களாலும் அதிகரித்தன. வழக்கமாக, மாறுந் தன்மையுடைய வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ரூ. 42 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தவேளையில், பொதுமக்களின் கையிருப்பில் இருந்த திறைசேரி உண்டியல்கள் ரூ. 1.1 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தன.

## அட்டவணை II (உ) 4

### பண நிரம்பலின் கூறுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலப்பகுதி முடிவில் | பொது மக்களிடமுள்ள நாணயம் | | பொது மக்களிடமுள்ள கேள்வி வைப்புக்கள் | | மொத்தப் பண நிரம்பல் |
|---|---|---|---|---|---|
| | தொகை | மொத்தப் பண நிரம்பலின் சதவீதமாக | தொகை | மொத்தப் பண நிரம்பலின் சதவீதமாக | |
| 1961 ... | 692.2 | 53 8 | 596.4 | 46.2 | 1,288.6 |
| 1962 ... | 712.6 | 53.1 | 630.0 | 46.9 | 1,342.7 |
| 1963 ... | 828.4 | 55.0 | 677.7 | 45.0 | 1,506.0 |
| 1964 ... | 853.0 | 52.6 | 768.8 | 47.4 | 1,621.8 |
| 1965 ... | 901.4 | 52.5 | 814.3 | 47.5 | 1,715.7 |
| 1966 ... | 882.5 | 53.2 | 776.4 | 46.8 | 1,658.9 |
| 1967 ... | 979.9 | 54.2 | 827.7 | 45.8 | 1,807.6 |
| 1968 .. | 1,066.2 | 55.7 | 847.0 | 44.3 | 1,913.2 |
| 1969 ... | 1,083.9 | 57.6 | 799.2 | 42.4 | 1,883.1 |
| 1970 .. | 935.1 | 47.6 | 1,031.5 | 52.4 | 1,966.6 |
| 1971 ... | 1,115.3 | 51.9 | 1,033.8 | 48.1 | 2,149 1 |
| 1972 ... | 1,202.3 | 48.5 | 1,278.8 | 51.5 | 2,481.1 |
| 1973 .. | 1,436.7 | 51.7 | 1,341.0 | 48.3 | 2,777.7 |
| 1974 ... | 1,539.3 | 52.3 | 1,406.3 | 47.7 | 2,945.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (உ) 5

### நாணய அமைப்பு 100, 50, 10, 5 ரூபாய்களைக் கொண்ட இனங்களின்படி

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலப்பகுதி முடிவில் | ரூ. 100 | ரூ. 50 | ரூ. 10 | ரூ. 5 | நாணய வெளியீடு* |
|---|---|---|---|---|---|
| 1959 ... | 174.5 | 152.1 | 193.5 | 36.2 | 621.3 |
| 1960 . | 148.4 | 148.4 | 237.6 | 40.1 | 644.6 |
| 1961 ... | 211.9 | 180.3 | 254.6 | 42.1 | 763.8 |
| 1962 .. | 238.2 | 186.8 | 241.9 | 42.8 | 789.4 |
| 1963 .. | 275.3 | 236.7 | 257.6 | 46.5 | 900.9 |
| 1964 .. | 168.4 | 258.3 | 359.5 | 55.5 | 932.1 |
| 1965 .. | 239.9 | 297.8 | 319.7 | 50.5 | 1,002.8 |
| 1966 ... | 272.0 | 292.9 | 288.2 | 48.6 | 993.7 |
| 1967 ... | 316.2 | 313.1 | 296.3 | 51.3 | 1,072.8 |
| 1968 ... | 393.7 | 330.6 | 299.5 | 55.3 | 1,181.9 |
| 1969 ... | 435.7 | 322.9 | 293.7 | 54.1 | 1,212.7 |
| 1970 ... | 252.0 | 261.0 | 384.4 | 71.4 | 1,090.4 |
| 1971 ... | 421.1 | 312.9 | 353.1 | 70.7 | 1,285.1 |
| 1972 ... | 532.4 | 351.4 | 353.9 | 74.9 | 1,444.8 |
| 1973 ... | 657.9 | 420.2 | 359.8 | 76.6 | 1,653.0 |
| 1974 ... | 778.2 | 439.8 | 373.6 | 82.4 | 1,829.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* 2, 1 ரூபா தாள்களும் சகல குத்திகளும் அடங்கும்.

இரண்டாந்தரச் சொத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சியின் முக்கிய பண்பென்னவெனில் தவணை, சேமிப்பு வைப்புக்கள் கணிசமானளவால் அதிகரித்தமையேயாகும். வர்த்தக வங்கிகள், தேசிய சேமிப்பு வங்கி என்பவற்றின் கிளைகள் திறக்கப்பட்டமையினால் பெருமளவு சேமிப்பினைத் திரட்டக் கூடியதாக இருந்ததனை இது காட்டுகின்றது. எனினும், வர்த்தக வங்கிகள் அதேயளவுக்குக் கேள்வி வைப்புக்கள் அதிகரிப்பதற்குக் காரணமாக இருக்கவில்லை. மேலும் தேசிய சேமிப்பு வங்கிகளில் இடப்பட்டிருந்த தவணை வைப்புக்கள் கூடுதலான வட்டி வீதங்கள் கொண்டு விளங்கிய அதேவேளையில், ஒருவருக்கு ஆண்டிற்கு ரூ. 1000/- என்ற அடிப்படையில் ஒரு குடும்பத்தில் ஆகக் கூடியது 6 பேர் வரைக்கும் என்ற முறையில் தவணை சேமிப்பு வைப்புக்களினாலான வட்டி உழைப்புக்கள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தன,

பரந்த அடிப்படையிலான வங்கியிலுள்ள வைப்புக்களின் உரிமையாளர்கள் பரம்பலை அட்டவணை II (உ) 6 காட்டுகிறது. 1974 ஆம் ஆண்டில் வர்த்தக வங்கிகளிடம் உள்ள தனியார் துறைக்கான மொத்த வைப்புக்கள் ரூ. 2014 இலட்சத்தால் அதிகரிக்கப்பட்டது. இவற்றில் அரைவாசிக்கு மேலாக ரூ. 1072 இலட்சமுடைய தொகை சேமிப்பு வைப்புக்களாகவும், அதேவேளையில் தவணை வைப்புக்கள் ரூ 557 இலட்சத்தால் அதிகரித்தன. கேள்வி வைப்புக்களிலான அதிகரிப்பு ரூ. 385 இலட்சமாகும். வியாபாரத் துயையினால், வியாபாரமற்ற துறையினால் சொண்டுள்ள மொத்த வைப்புக்கள் எனப் பாகுபடுத்துமிடத்து (வியாபாரத்துறை - நிதி நிறுவனங்கள். தோட்டப் பயிர்ச்செய்கை, வியாபார, உற்பத்தி நிறுவனங்கள் ஏனைய தொழில்கள்) வியாபாரமற்ற துறை - உள்ளூராட்சி மன்றங்கள் தனிப்பட்டவர்கள்) அவற்றின் அதிகரிப்பு முறையே ரூ. 625 இலட்சமாகவும், ரூ. 1390 இலட்சமாகவும் விளங்கின.

கேள்வி வைப்புக்களில் வியாபாரத் துறையின் பங்கு 1974 ஆம் ஆண்டில் 60 சத வீதத்திலிருந்து 58 சத வீதமாக வீழ்ச்சியடைய, தவணை வைப்புக்கள் 57.4 சத வீதத்திலிருந்து 62.1 சத வீதமாக அதிகரித்தன. வியாபாரத் துறையிலான வர்த்தக உற்பத்தி நிறுவனங்களும், ஏனைய தொழில்களும் கேள்வி வைப்புக்களின் 47.8 சத வீதத்தினைக் கொண்டிருந்தது. கேள்வி வைப்புக்களில் 21.1 சத வீதத்தினை நிதி நிறுவனங்கள் கொண்டிருந்தவேளையில், உற்பத்தி நிறுவனங்களும், ஏனைய நிறுவனங்களும் 24.2 சத வீதத்தினைக் கொண்டிருந்தன. 1973 ஆம் ஆண்டைப்போல், வியாபாரமற்ற துறையானது, சேமிப்பு வைப்புக்களில் 93 சத வீதத்தினைக் கொண்டிருந்தன. வியாபாரமற்ற துறையில் மொத்த வைப்புக்களில் 50.4 சதவீதம், அதாவது, ரூ. 13,711 இலட்சங்கள், தனிப்பட்டவர்களால் சொண்டிருந்த வேளையில், 1973 ஆம் ஆண்டில் இது 49.3 சத வீதமாக அல்லது ரூ. 12 404 இலட்சங்களாக விளங்கியது. இந்தத் தொகையில் 32.9 சத வீதக் கேள்வி வைப்புக்களும், 28.3 சத வீத தவணை வைப்புக்களும், 91.5 சத வீத சேமிப்பு வைப்புக்களும் தனிப்பட்டவர்களுக்கு உரியதாக இருந்தது.

# அட்டவணை II (உ) 6

## வர்த்தக வங்கிகளிடமுள்ள தனியார் துறையின் கேள்வி, தவணை, சேமிப்பு வைப்புக்களின் உடைமையாளர்கள் (காலப்பகுதி முடிவில் உள்ளபடி)

(தொகை: பத்து இலட்சம் ரூபாய்களில்)

| உடைமையாளர் | கேள்வி | | தவணை | | சேமிப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | % | தொகை | % | தொகை | % | தொகை | % |
| **நிதி நிறுவனங்கள்:** | | | | | | | | |
| 1973 திசெம்பர் ... | 60.4 | 4.7 | 103.5 | 21.9 | 23.9 | 3.2 | 187.7 | 7.5 |
| 1974 மாச்சு .. | 68.5 | 4.6 | 105.7 | 21.7 | 23.0 | 3.0 | 197.2 | 7.2 |
| 1974 யூன் .. | 65.4 | 5.1 | 99.4 | 19.5 | 27.7 | 3.4 | 192.5 | 7.4 |
| 1974 செத்தெம்பர் .. | 65.5 | 4.6 | 100.2 | 19.2 | 25.1 | 3.1 | 190.8 | 6.9 |
| 1974 திசெம்பர் ... | 55.7 | 4.2 | 111.3 | 21.1 | 20.4 | 2.4 | 187.4 | 6.9 |
| **பெருந்தோட்டங்கள்:** | | | | | | | | |
| 1973 திசெம்பர் .. | 62.4 | 4.8 | 34.6 | 7.3 | 0.3 | ... | 97.3 | 3.9 |
| 1974 மாச்சு .. | 80.5 | 5.4 | 30.9 | 6.4 | 1.1 | ... | 112.5 | 4.1 |
| 1974 யூன் ... | 78.5 | 6.1 | 38.2 | 7.5 | 0.6 | 0.1 | 117.4 | 4.5 |
| 1974 செத்தெம்பர் ... | 77.5 | 5.4 | 40.1 | 7.7 | 0.6 | 0.1 | 118.2 | 4.3 |
| 1974 திசெம்பர் ... | 79.6 | 6.0 | 40.5 | 7.7 | 0.7 | 0.1 | 120.8 | 4.4 |
| **வர்த்தகம்:** | | | | | | | | |
| 1973 திசெம்பர் .. | 282.0 | 21.8 | 51.2 | 10.8 | 16.6 | 2.2 | 349.8 | 13.9 |
| 1974 மாச்சு .. | 385.3 | 26.1 | 51.8 | 10.6 | 17.0 | 2.2 | 454.1 | 16.6 |
| 1974 யூன் ... | 239.1 | 18.5 | 51.8 | 10.2 | 18.8 | 2.3 | 309.7 | 11.9 |
| 1974 செத்தெம்பர் ... | 316.9 | 22.1 | 56.1 | 10.8 | 18.5 | 2.3 | 391.5 | 14.1 |
| 1974 திசெம்பர் ... | 222.5 | 16.7 | 48.4 | 9.2 | 27.0 | 3.2 | 297.9 | 11.0 |
| **தயாரிப்புத் தாபனங்கள்:** | | | | | | | | |
| 1973 திசெம்பர் ... | 187.6 | 14.5 | 22.7 | 4.8 | 0.8 | 0.1 | 211.1 | 8.4 |
| 1974 மாச்சு ... | 234.9 | 15.9 | 32.1 | 6.6 | 1.1 | ... | 268.1 | 9.8 |
| 1974 யூன் ... | 168.1 | 13.0 | 44.5 | 8.7 | 1.3 | 0.2 | 213.8 | 8.2 |
| 1974 செத்தெம்பர் ... | 210.9 | 14.7 | 42.7 | 8.2 | 1.7 | 0.2 | 255.3 | 9.2 |
| 1974 திசெம்பர் ... | 208.8 | 15.6 | 64.7 | 12.2 | 1.6 | 0.2 | 275.1 | 10.1 |
| **ஏனைய வியாபாரம்:** | | | | | | | | |
| 1973 திசெம்பர் .. | 183.5 | 14.2 | 59.4 | 12.6 | 11.0 | 1.5 | 253.9 | 10.1 |
| 1974 மாச்சு . | 218.3 | 14.8 | 58.3 | 12.0 | 9.5 | 1.3 | 286.1 | 10.5 |
| 1974 யூன் .. | 197.4 | 15.3 | 71.8 | 14.1 | 9.2 | 1.1 | 278.4 | 10.7 |
| 1974 செத்தெம்பர் ... | 203.3 | 14.2 | 76.0 | 14.6 | 10.2 | 1.2 | 289.5 | 10.4 |
| 1974 திசெம்பர் ... | 207.3 | 15.5 | 63.3 | 12.0 | 10.5 | 1.2 | 281.1 | 10.3 |
| **உள்ளூர் ஆட்சி மன்றங்கள்:** | | | | | | | | |
| 1973 திசெம்பர் ... | 46.9 | 3.6 | 26.2 | 5.5 | 0.3 | ... | 73.4 | 2.9 |
| 1974 மாச்சு ... | 47.5 | 3.2 | 24.8 | 5.1 | 0.3 | .. | 72.7 | 2.7 |
| 1974 யூன் . | 45.5 | 3.5 | 24.9 | 4.9 | 0.3 | ... | 70.7 | 2.7 |
| 1974 செத்தெம்பர் ... | 44.1 | 3.1 | 24.9 | 4.8 | 0.2 | ... | 69.2 | 2.5 |
| 1974 திசெம்பர் ... | 45.6 | 3.4 | 22.9 | 4.3 | 0.3 | ... | 68.8 | 2.5 |
| **வியாபாரத் தொடர்பற்ற நிறுவனங்கள்:** | | | | | | | | |
| 1973 திசெம்பர் ... | 64.0 | 4.9 | 28.1 | 5.9 | 11.7 | 1.6 | 103.8 | 4.1 |
| 1974 மாச்சு .. | 57.7 | 3.9 | 36.3 | 7.5 | 12.9 | 1.7 | 106.9 | 3.9 |
| 1974 யூன் ... | 63.1 | 4.9 | 31.2 | 6.1 | 12.9 | 1.6 | 107.3 | 4.1 |
| 1974 செத்தெம்பர் ... | 75.1 | 5.2 | 29.9 | 5.7 | 12.2 | 1.5 | 117.1 | 4.2 |
| 1974 திசெம்பர் .. | 76.4 | 5.7 | 27.8 | 5.3 | 12.5 | 1.5 | 116.7 | 4.3 |
| **தனியாட்கள்:** | | | | | | | | |
| 1973 திசெம்பர் ... | 409.3 | 31.6 | 146.9 | 31.1 | 684.2 | 91.4 | 1240.4 | 49.3 |
| 1974 மாச்சு ... | 385.0 | 26.0 | 146.4 | 30.1 | 698.2 | 91.5 | 1229.6 | 45.1 |
| 1974 யூன் ... | 435.9 | 33.7 | 147.1 | 28.9 | 738.5 | 91.2 | 1321.4 | 50.6 |
| 1974 செத்தெம்பர் .. | 439.9 | 30.7 | 151.4 | 29.0 | 752.3 | 90.6 | 1343.6 | 48.4 |
| 1974 திசெம்பர் ... | 438.6 | 32.9 | 149.5 | 28.3 | 783.0 | 91.5 | 1371.1 | 50.4 |
| **மொத்தம்:** | | | | | | | | |
| 1973 திசெம்பர் | 1296.0 | 100.0 | 472.7 | 100.0 | 748.8 | 100.0 | 2517.5 | 100.0 |
| 1974 மாச்சு ... | 1477.7 | 100.0 | 486.4 | 100.0 | 763.1 | 100.0 | 2727.2 | 100.0 |
| 1974 யூன் ... | 1293.0 | 100.0 | 508.8 | 100.0 | 809.4 | 100.0 | 2611.2 | 100.0 |
| 1974 செத்தெம்பர் ... | 1433.1 | 100.0 | 521.3 | 100.0 | 820.9 | 100.0 | 2775.2 | 100.0 |
| 1974 திசெம்பர் ... | 1334.5 | 100.0 | 528.4 | 100.0 | 856.0 | 100.0 | 2718.9 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1. (ஈ) வட்டி வீதங்கள்

1974 ஆம் ஆண்டில் வட்டி வீதங்கள் அமைப்பானது சிறிய மாற்றத்திற்குள்ளாகியது. வர்த்தக வங்கிகளினால் விதிக்கப்பட்ட கொடுப்பனவு மீதான வட்டி வீதங்களில் ஏற்பட்ட முக்கிய மாற்றமென்னவெனில் இரண்டு வங்கிகள் பாதுகாப்புடன் வழங்கிய முற்பணங்களில் ஆகக் கூடுதலான வட்டியாக ½ வீதத்திலிருந்து 1 வீதமாக உயர்த்தியமையும் பிறிதொரு வங்கியினால் பாதுகாப்பற்ற முற்பணங்களில் 1½ சத வீதமாக உயர்த்தியமையுமாகும். வர்த்தக வங்கிகளின் வைப்புக்களின் வட்டி வீதமும், பெரிய கொடுகடன், சேமிப்பு நிறுவனங்களின் வைப்புக்கள் கொடுகடன் பணத்தினாலான வட்டி வீதங்கள், வங்கி வீதமும் மாற்றமுறாதிருந்தன.

உயர்ந்துசெல்லும் வட்டிச் செலவுகள் உற்பத்தி, ஏற்றுமதி முயற்சிகளில் மேலதிக இடர்ப்பாடுகளை ஏற்படுத்தக் கூடிய தன்மையுடைத்து, என்ற காரணத்தினால் ஓரளவுக்கு உறுதியான நிலையில் இவ்வாண்டிற்கான வட்டி வீதங்களில் அமைப்பானது பேணப்பட்டது. மிக முக்கியமென்னவெனில், மே மாதம் 24 ஆந் திகதி தொடக்கம் வர்த்தக வங்கிகளில் விதிக்கப்பட்ட உச்சவரம்பிற்கு ஏற்ப உற்பத்திக்கும் ஏற்றுமதிகளுக்கே நிதியீட்டலாமேதவிர ஏனைய துறைகளுக்கு வர்த்தக வங்கிகள் கடன் வழங்க முடியாது. இவ்வாறாக, மத்திய வங்கியானது கொடுகடன்களின் செலவுகளைக் கூட்டுவதன்மூலம் கடன் பெறுவதனைத் தடுப்பதற்குப் பதிலாக, நேரடிக் கொடுகடன் வழங்களில் கட்டுப்பாடுகளைக்கொண்டது.

2 (அ) வர்த்தக வங்கித் தொழில் – முக்கிய போக்குகள்

முன்னைய ஆண்டில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கெதிராக, 1974 ஆம் ஆண்டில் வைப்புக்கள் வாயிலாக வர்த்தக வங்கிகளுக்குக் கிடைத்த மூல வளங்கள் கணிசமானளவால் அதிகரித்தன இவ்வதிகரிப்பானது, கேள்வி வைப்புக்களிலும் தவணை சேமிப்பு வைப்புக்களிலும் ஏற்பட்டது. 1973 ஆம் ஆண்டில் பின் கூறப்பட்டது வீழ்ச்சியடைந்தது. ஏனைய மொத்தக் கடன்களில் ஏற்பட்ட அதேயளவு அதிகரிப்பினால் இவை ஓரளவு பதிலீடு செய்யப்பட்டபோதிலும் முன்னைய ஆண்டில் அவைகூட வீழ்ச்சியடைந்தே காணப்பட்டன. செலுத்தப்பட்ட மூலதன ஒதுக்கு நிதியினதும் பங்கிடப்படாத இலாபங்கள் அதிகரித்தமையால்தான் பெருமளவுக்கு இவ்வாண்டில் வங்கித் தொழிலில் மூலதனங்கள் பெருக்கப்பட்டது அப்படியிருந்தபோதிலும் வர்த்தக வங்கிகளிடம் கொடுகடனுக்கு ஏற்பட்ட கேள்வியானது இவ்வாண்டில் பெருமளவுக்கு உயர்ந்தமையால், முழுத் தேவையையும், இவ்வதிகரித்த மூலவளங்களால் தாங்கயிடியவில்லை எனவே வங்கிகள் இத்தகைய மூல வளக் குறைவினைத் நிரப்புவதற்கு பெருமளவு மத்திய வங்கியிலிருந்து பெற்ற கடன்பாடுகளில் தங்கியிருக்கவேண்டியேற்பட்டது.

மேலும், 1974 ஆம் ஆண்டு மே மாதம் வர்த்தக வங்கிகளின் மீது வங்கிக் கொடுகடன் தொடர்பாக உச்சவரம்பு விதிக்கப்பட்டது.

நுகர்விற்கு எதிராக, முக்கிய நோக்கங்களுக்காகக் கொடுகடன் வழங்கும், நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட அமைப்பிலான மாற்றத்தில் இதனது தாக்கமும் பல ஆண்டுகளாக காணப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட கொடுகடன் கட்டுப்பாடுகளின் தாக்கமும் தெளிவாகத் தெரிகின்றது.

2. (ஆ) வங்கிச் சொத்துக்களினதும் மொத்தக் கடன்களினதும் அமைப்பு

1974 ஆம்[1] ஆண்டில் வர்த்தக வங்கிகளின் சொத்துக்களும், மொத்தக் கடன்களும் ரூ. 10,746 இலட்சத்தால் அதிகரித்தன மொத்தக் கடன்கள் பக்கத்தில் ஆகக் கூடுதலான அதிகரிப்பான ரூ. 3,867 இலட்சங்கள் வைப்புக்களில் ஏற்பட்டது. இதில் தவணை சேமிப்பு வைப்புக்கள் ரூ. 2.490 இலட்சங்களாகப் பெரிதளவால் அதிகரித்ததுடன், மிகுதி, கேள்வி வைப்புக்களாக இருந்தது. அதற்கு அடுத்தபடியான அதிகரிப்பாக ரூ. 3,697 இலட்சக் கடன்பாடுகள் விளங்குகின்றன. மத்திய வங்கியிலிருந்து பெற்ற கடன்பாடுகளே இவ் முழு அதிகரிப்புக்குக் காரணமாகும். ஆனால் வெளிநாட்டுக் கடன்பாடுகள் ரூ. 30 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தது. மூலவளங்கள், ஏனைய மொத்தக் கடன்களை உறுவதன் மூலமும் ரூ 2779 இலட்சத்தால் அதிகரித்தன. மேலும் ஆய்வுக்கெடுக்கப்பட்ட இவ்வாண்டுல் பணம் இறுக்கப்பட்ட மூலதனம், ஒதுக்கு நிதி, பங்கிடப்படாத இலாபங்கள் என்பனவும் ஓரளவு தொகையான ரூ. 434 இலட்சங்கள் மொத்தக் கடன்கள் அதிகரிப்பதற்குக் காரணமாயின.

சொத்துக்களில் கூடுதலான அதிகரிப்புக்கள் கடன்கள் முற்பணங்களாக விளங்கி, ரூ. 10.446 இலட்சங்களை அடைந்தன. இவற்றில் பெரும்பங்கு, ரூ. 7,164 இலட்சங்கள் கொண்ட கடன்களாகவும், ரூ. 1 525 இலட்சங்கள் கொண்ட மேலதிகப் பற்றுக்களாகவும் மிகுதியான ரூ 1,758 இலட்சங்களைக் கொள்வனவு செய்யப்பட்டதும், கழிவு செய்யப்பட்டதுமான ஏற்றுமதி, இறக்குமதி உண்டியல்களைக் கொண்டிருந்தது. முன்பு கூறப்பட்டதுபோல, இவ்வாண்டில் கடன்கள், மேலதிகப் பற்றுக்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பானது, பெருமளவுக்கு அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கும் சிறிதளவுக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கிய கடன்களைக் கொண்டிருந்தது. ஏனைய விடயங்கள் எனும் பகுதியில் பின்வரும் சொத்துக்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புகள் பதிவுசெய்யப்பட்டன. சேர்க்கப்படுகின்ற தன்மையமில் உள்ள பணங்கள் ரூ. 1,309 இலடசங்களாகவும், கையிருப்பிலுள்ள பணம் ரூ. 731 இலட்சங்களாகவும் நிலையான சொத்துக்களும், ஏனைய சொத்துக்களும் ரூ. 291 இலட்சங்களாகவும் விளங்கின. சேர்க்கப்படும் தன்மையிலுள்ள கொடுகடன்கள் உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் கொள்வனவுக்காக நிதியினைக் கொண்டிருந்தன

1974 ஆம் ஆண்டில் ஏற்பட்ட முக்கிய மாற்றம் என்னவெனில், வர்த்தக வங்கிகளிடம் இருந்த அரசாங்கக் கடன் பத்திரங்கள் பெரிதளவால் வீழ்ச்சியடைந்தமையாகும். கடந்த பல ஆண்டுகளாக திறைசேரி உண்டியல்கள்,

1. பிற்சேர்க்கை III 2 ஐப் ார்க்கவும். அட்டவணை எண் 17.

அட்டவணை II (உ) 7

## வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்கள்

(மாத எண்தொகைகளின் சராசரி)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1969 | 1970* | 1971 | 1972***இன் முதல் எட்டு மாதங்கள் | 1973 | 1974 | காலப் பகுதி முடிவில் 1973 திசெம்பர் | காலப் பகுதி முடிவில் 1974 திசெம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையிருப்பிலுள்ள பணமும், மத்திய வங்கியிலுள்ள வைப்புக்களும் (நியதிச் சட்ட முறையான ஒதுக்குப் பணம் உட்பட) ... | 182 | 224 | 233 | 218 | 247 | 250 | 248 | 369 | 382 | 483 | 591 | 703 | 775 |
| வெளிநாட்டு நிலுவைகள் .. .. | 49 | 55 | 62 | 57 | 72 | 63 | 36 | 51 | 57 | 66 | 93 | 95 | 90 |
| இறைசேரி உண்டியல்கள் ... ... .. | 73 | 89 | 124 | 80 | 102 | 50 | 41 | 308 | 269 | 132 | 58 | 154 | 60 |
| கழிவுசெய்யப்பட்ட உண்டியல்கள் . .. | 126 | 173 | 175 | 198 | 252 | 241 | 275 | 158 | 153 | 231 | 403 | 254 | 429 |
| மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள் ... ... | 430 | 541 | 594 | 553 | 673 | 604 | 600 | 886 | 861 | 912 | 1145 | 1206 | 1354 |
| மொத்த முதலீடுகள்** ... ... . | 330 | 329 | 330 | 300 | 278 | 275 | 263 | 373 | 377 | 360 | 335 | 348 | 329 |
| மொத்தக் கடன்களும் மேலதிகப்பற்றுக்களும் ... ... | 633 | 669 | 682 | 809 | 1000 | 1240 | 1391 | 1490 | 1630 | 1861 | 2464 | 1999 | 2867 |
| கேள்வி வைப்புக்கள்† ... ... ... ... | 853 | 917 | 949 | 914 | 955 | 945 | 958 | 1219 | 1213 | 1434 | 1723 | 1745 | 1894 |
| தவணை வைப்புக்களும், சேமிப்பு வைப்புக்களும்... ... | 535 | 572 | 631 | 649 | 798 | 915 | 989 | 1238 | 1328 | 1346 | 1520 | 1412 | 1661 |
| மொத்த வைப்புக்கள் ... ... ... ... | 1389 | 1490 | 1580 | 1564 | 1755 | 1863 | 1948 | 2458 | 2543 | 2785 | 3249 | 3168 | 3555 |
| | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % |
| கேள்வி வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் .. ... | 21.3 | 24.4 | 24.5 | 23.8 | 25.9 | 26.4 | 25.9 | 30.3 | 31.5 | 33.7 | 34.3 | 40.3 | 40.9 |
| மொத்த வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம்... ... | 13.1 | 15.0 | 14.7 | 13.9 | 14.1 | 13.4 | 12.7 | 15.0 | 15.0 | 17.3 | 18.2 | 21.2 | 21.8 |
| மொத்த வைப்புக்களுக்கு அந்நிய நிலுவைகளின் விகிதம் .. | 3.5 | 3.7 | 3.9 | 3.6 | 4.1 | 3.4 | 1.8 | 2.1 | 2.2 | 2.4 | 2.9 | 3.0 | 2.5 |
| மொத்த வைப்புக்களுக்கு இறைசேரி உண்டியல்களின் விகிதம்... | 5.3 | 6.0 | 7.8 | 5.1 | 5.8 | 2.7 | 2.1 | 12.5 | 10.6 | 4.7 | 1.8 | 4.9 | 1.7 |
| மொத்த வைப்புக்களுக்குக் கழிவுசெய்யப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் ... ... .. | 9.1 | 11.6 | 11.1 | 12.7 | 14.4 | 12.9 | 14.1 | 6.4 | 6.0 | 8.3 | 12.4 | 8.0 | 12.1 |
| கேள்வி வைப்புக்களுக்குத் திரவச் சொத்துக்களின் விகிதம் ... | 50.4 | 59.0 | 62.6 | 60.5 | 70.5 | 63.9 | 62.6 | 72.7 | 71.0 | 63.6 | 66.4 | 69.1 | 71.5 |
| மொத்த வைப்புக்களுக்குத் திரவச் சொத்துக்களின் விகிதம் ... | 31.0 | 36.3 | 37.6 | 35.4 | 38.3 | 32.4 | 30.8 | 36.0 | 33.9 | 32.7 | 35.2 | 38.1 | 38.1 |
| மொத்த வைப்புக்களுக்கு முதலீடுகளின் விகிதம் ... | 23.8 | 22.1 | 20.9 | 19.2 | 15.8 | 14.8 | 13.5 | 15.2 | 14.8 | 12.9 | 10.3 | 11.0 | 9.3 |
| மொத்த வைப்புக்களுக்குக் கடன்களினதும், மேலதிகப் பற்றுக்களினதும் விகிதம் ... .. .. | 45.6 | 44.9 | 43.2 | 51.7 | 57.0 | 66.6 | 71.4 | 60.6 | 64.1 | 66.8 | 75.8 | 63.0 | 80.6 |

† உள்நாட்டு வங்கிகளிடையே உள்ள வைப்புக்களை உள்ளடக்கா.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* ரூ. 100/-, ரூ. 50/- இனத்தாள்களை நாணய மதிப்புநீக்கம் செய்ததன் விளைவால் 1970ஆம் ஆண்டின் இறுதி 3 மாதங்களிலும் வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் அமைப்பில் ஏற்பட்ட வேறுபாட்டினால், இவ்வடைப்புக்கோட்டிலுள்ள எண்தொகைகள், சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான எண்தொகைகளில் மட்டுமே கணக்கிடப்பட்டுள்ளன.

** அரசாங்கப் பிணைகளும், அரசாங்க உத்தரவாதப் பிணைகளும், தனியார் பிணைகளும்.

*** 1972 செத்தெம்பர் - திசெம்பர் காலப்பகுதியில் வர்த்தக வங்கி ஊழியர்களின் வேலைநிறுத்தம் நடைபெற்றதால் இக்காலப்பகுதி எண்தொகைகள் கிடைக்கத்தக்கனவாயில்லை.

ஏனைய அரசாங்கப் பிணைகள், என்பவற்றின் வங்கி உடமைகள் மிக உயர்ந்த மட்டத்தில் இருந்தன. 1974 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் இதற்குமாறாக திறைசேரி உண்டியல்களின் பெறுமதி ரூ. 596 இலட்சங்களாகி ரூ. 940 இலட்சங்கள் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. மேலும் அரசாங்கப் பிணைகள் ரூ 3,251 இலட்சங்களாகி, ரூ. 192 இலட்ச வீழ்ச்சியைக் காட்டியது. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கிய கொடுகடன் மூலம் கிடைக்கின்ற இலாப வீதம் கவர்ச்சியாக இருந்தமையினால் பெருமளவுக்கு இவைகளுக்கு நிதி வழங்கியமையே மேற்கூறிய நிலை ஏற்படக் காரணமாகும்

2 (இ) நிதிகளின் மூலங்களும் அவற்றின் பயன்பாடும்

1969-74 காலப்பிரிவில் வணிக வங்கி மூல வளங்களின் மீதான தரவினையும் அவற்றின் பயன்பாட்டினையும் அட்டவணை II (உ) 8 தருகின்றது.

1974இல் வர்த்தக வங்கிகளிடம் கொடுக்கும்படி கோரப்பட்ட மூல வளங்களின் அளவானது ரூபா 12,828 இலட்சத்தில் வழக்கத்திற்கு மாறான உயர் அளவில் இருந்தது.

முன் கண்டவாறு, கடன் விரிவாக்கத்திற்கு முதன்மை மூலமாக அரசாங்கக் கூட்டுத்தாபனத்துறையும், கூட்டுறவு சங்கங்கள் குறைந்த அளவிலும் விளங்கின. மூலவளங்களில் எழுந்த குறைநிலையைச் சீராக்குவதற்கு தேவையான நிதிகளின் அளவினை அரசத் துறையும், வங்கியிடைத் தொழிற்பாடுகளும் கொடுத்த அதேவேளையில் மத்திய வங்கியானது வணிக வங்கிகட்கு நிதிகளில் பெருமளவை வழங்கியது; தேவைகளின் மீதியை, குறைந்தளவில் உள்நாட்டு தனியார் துறை நடைமுறைகள் ஈடுசெய்தன.

1974ல் அரசாங்கத் துறையானது பெரும்பாலும் முற்றளவில் இறைசேரி உண்டியல்களை உள்ளடக்கியிருந்ததும் அரசாங்கக் கடன் பத்திர இருப்புக்களின் அடக்கத்தின் குறைப்பு ரூ. 1,132 இலட்சமாகவும், அரச வைப்புக்களில் ரூ. 848 இலட்ச ஒரு உயர்ச்சியை அடைந்ததுமான வணிக வங்கி மூல வளங்களில் ரூ. 1,980 இலட்சத்தை வழங்கியது. இதற்கெதிராக கடனிற்காக அரச துறையின் கேள்வி குறிப்பிடற்குரியதல்லா மட்டமான ரூ. 3 இலட்சத்திற்குரியதல்லா மட்டமான ரூ. 3 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற, அதன் விளைவால், வணிக வங்கிகட்கு தேறிய உள்ளோட்ட நிதிகளின் மொத்தமானது ரூ. 1,977 இலட்சமாயிற்று எனினும், நிதிகளின் பெருமளவு பங்கில் மத்திய வங்கியால் வழங்கப்பட்ட ரூ 4,495 இலட்சமானது, பெரும்பாலும் ஏறக்குறைய மத்திய வங்கியின் கடன் அடிப்படையில் இருந்தது. வங்கிக்கடன் வழங்கல் அளவினை மதிப்பிடும் வர்த்தக வங்கிகளின் வைப்புக்களின் அளவானது, கடன் தேவைகளின் உயர் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், ஒரு மிதமான அளவில் வளர்ந்திருந்தது. எனவே, வங்கிகள் மத்திய வங்கியிடமிருந்து மிக உயர் அளவில் எடுக்கும் நிலைக்குள்ளான அதேவேளை, இறைசேரி உண்டியல் போன்ற திரவச் சொத்துக்களையும் குறைக்க நேர்ந்தது.

## அட்டவணை II (உ) 8

### வங்கிகளினது வளங்களின் மாற்றங்களும், அவற்றின் பயன்பாடுகளும் 1969 — 1972

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1969 டிசெம்பர் தொடக்கம் 1970 டிசெம்பர் வரை | 1970 டிசெம்பர் தொடக்கம் 1971 டிசெம்பர் வரை | 1971 டிசெம்பர் தொடக்கம் 1972* டிசெம்பர் வரை | 1972* டிசெம்பர் தொடக்கம் 1973 டிசெம்பர் வரை | 1973 டிசெம்பர் தொடக்கம் 1974 டிசெம்பர் வரை |
|---|---|---|---|---|---|
| **நிதிகளின் மூலங்கள்** | | | | | |
| **1. அரசாங்கத் துறை** .. | 215.5 | 3.5 | 315.5 | 290.8 | 198.0 |
| அரசாங்கப் பத்திர உடைமைகளின் குறைப்பு .. | — | — | — | 237.8 | 113.2 |
| வைப்புக்களின் அதிகரிப்பு .. | 73.7 | — | 315.5 | — | 84.8 |
| இறக்குமதி உண்டியல்களின் வீழ்ச்சி ... | 141.8 | — | — | 8.3 | — |
| குறுந்தவணைக் கொடுகடனின் வீழ்ச்சி (1) .. | — | 3.5 | — | 44.7 | — |
| **2. மத்திய வங்கி** | 4.3 | 39.8 | — | 118.4 | 449.5 |
| கடன்பாடுகளின் அதிகரிப்பு ... | 4.3 | 24.5 | — | 118.4 | 447.5 |
| ஒதுக்குகளின் வீழ்ச்சி ... | — | 15.3 | — | — | 2.0 |
| **3. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்** .. | 44.7 | 27.8 | 27.6 | 232.8 | 15.2 |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... | 44.7 | 27.8 | 27.6 | 88.6 | 15.2 |
| முற்பணங்களின் வீழ்ச்சி ... | — | — | — | 144.2 | — |
| **4. கூட்டுறவுகள்** .. | 19.0 | 21.8 | 51.5 | 9.9 | 17.3 |
| வைப்புக்களின் அதிகரிப்பு ... | 19.0 | 18.4 | 51.5 | — | 17.3 |
| முற்பணங்களின் வீழ்ச்சி .. | — | 3.4 | — | 9.9 | — |
| **5. ஏனைய உள்நாட்டுத் தனியார் துறை** ... | 383.9 | 98.8 | 359.8 | — | 281.1 |
| வைப்புக்களின் அதிகரிப்பு .. | 341.9 | 98.8 | 359.8 | — | 281.1 |
| முற்பணங்களினதும், முதலீடுகளினதும் வீழ்ச்சி ... | 42.0 | — | — | — | — |
| **6. வங்கிகளுக்கிடையில் (2)** .. | 77.6 | 209.6 | 512.9 | 434.6 | 321.3 |
| மூலதனத்திலும், ஒதுக்குகளிலுமான அதிகரிப்பு ... | 17.8 | 24.6 | 7.7 | 8.7 | 43.4 |
| நிலையான இருப்புச் சொத்துக்களிலும், ஏனைய இருப்புச் சொத்துக்களிலுமான வீழ்ச்சி ... | — | — | — | 358.8 | — |
| 'ஏனைய' பொறுப்புக்களின் அதிகரிப்பு ... | 57.9 | 185.0 | 505.2 | — | 277.9 |
| வங்கிக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் (தேறிய) .. | 1.9 | — | — | 43.0 | — |
| கைப்பணத்தின் வீழ்ச்சி ... | — | — | — | 24.1 | — |
| **7. அந்நிய துறை** .. | 0.7 | 7.0 | 76.0 | 22.8 | 0.5 |
| கடன்பாடுகளின் அதிகரிப்பு .. | — | 7.0 | 72.1 | — | — |
| வைப்புக்களின் அதிகரிப்பு .. | 0.7 | — | 3.9 | — | 0.5 |
| அந்நிய நிலுவைகளின் வீழ்ச்சி ... | — | — | — | 22.8 | — |
| **வளங்களின் மொத்த அதிகரிப்பு** | 745.7 | 408.3 | 1343.3 | 1109.3 | 1282.9 |
| **நிதிகளின் பயன்பாடுகள்** | | | | | |
| **1. அரசாங்கத் துறை** ... | 335.6 | 75.1 | 129.4 | 68.7 | 0.3 |
| அரசாங்கப் பத்திர உடைமைகளின் அதிகரிப்பு .. | 335.0 | 50.4 | 46.8 | — | — |
| வைப்புக்களின் வீழ்ச்சி ... | — | 22.3 | — | 68.7 | — |
| அரசாங்க இறக்குமதி உண்டியல்களின் அதிகரிப்பு ... | — | 2.4 | 6.1 | — | 0.2 |
| குறுந்தவணை கொடுகடனின் அதிகரிப்பு (1) ... | 0.6 | — | 76.5 | — | 0.1 |
| **2. மத்திய வங்கி** ... | 88.3 | — | 121.3 | 239.7 | — |
| கடன்பாடுகளின் வீழ்ச்சி ... | — | — | 82.5 | — | — |
| ஒதுக்குகளின் அதிகரிப்பு ... | 88.3 | — | 38.8 | 239.7 | — |
| **3. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்** .. | 43.1 | 62.3 | 203.6 | — | 641.4 |
| வைப்புக்களின் வீழ்ச்சி ... | — | — | — | — | — |
| முற்பணங்களின் அதிகரிப்பு .. | 43.1 | 62.3 | 203.6 | — | 641.4 |
| **4. கூட்டுறவுகள்** ... | 146.3 | — | 90.7 | 25.3 | 189.1 |
| வைப்புக்களின் வீழ்ச்சி ... | — | — | — | 25.3 | — |
| முற்பணங்களின் அதிகரிப்பு .. | 146.3 | — | 90.7 | — | 189.1 |
| **5. ஏனைய உள்நாட்டுத் தனியார் துறை** ... | — | 84.1 | 132.5 | 240.3 | 241.2 |
| வைப்புக்களின் வீழ்ச்சி ... | — | — | — | 108.8 | — |
| முற்பணங்களினதும் முதலீடுகளினதும் அதிகரிப்பு ... | — | 84.1 | 132.5 | 131.5 | 241.2 |
| **6. வங்கிகளுக்கிடையில் (2)** ... | 112.3 | 151.4 | 530.1 | 462.0 | 110.9 |
| மூலதனத்திலும், ஒதுக்குகளிலுமான வீழ்ச்சி ... | — | — | — | — | — |
| நிலையான இருப்புச் சொத்துக்களிலும், ஏனைய இருப்புச் சொத்துக்களிலுமான அதிகரிப்பு ... | 88.1 | 128.2 | 415.8 | — | 29.1 |
| 'ஏனைய' பொறுப்புக்களின் வீழ்ச்சி ... | — | — | — | 462.0 | — |
| வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் (தேறிய) ... | — | 0.8 | 42.9 | — | 8.7 |
| கைப்பணத்தின் அதிகரிப்பு .. | 24.2 | 22.4 | 71.4 | — | 73.1 |
| **7. அந்நிய துறை** ... | 20.1 | 35.1 | 135.3 | 73.6 | 99.9 |
| கடன்பாடுகளின் வீழ்ச்சி ... | 7.9 | — | — | 70.0 | 3.0 |
| வைப்புக்களின் வீழ்ச்சி ... | — | 0.4 | — | 3.6 | — |
| அந்நிய நிலுவைகளின் அதிகரிப்பு ... | 12.2 | 34.7 | 135.3 | — | 96.9 |
| **பயன்படுத்தப்பட்ட நிதிவளங்களினது மொத்த அதிகரிப்பு** | 745.7 | 408.0 | 1342.9 | 1109.6 | 1282.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(1) இவ்விடயம், அரசாங்கக் கணக்கில் கொள்வனவு செய்யப்பட்ட காசோலைகள், காசுக் கட்டளைகள் ஆகியன வற்றைக் குறிக்கின்றது.

(2) இவ்விடயம், வர்த்தக வங்கித்தொழில் முறையில் கொடுக்கல்வாங்கல்களினால் ஏற்படும் இருப்புச் சொத் துக்கள், பொறுப்புக்களில் ஏற்பட்ட சகல மாற்றங்களையும் காட்டுகின்றது. சில கொடுக்கல்வாங்கல்களி னால் வங்கிகளின் (ஏனைய) பொறுப்புக்களில் ஏற்படும் மாற்றங்கள் தனியார் துறையிலுள்ளனவாயினும், இப்பல்வகைப்பட்ட விடயத்திலுள்ள மாற்றங்களைக் கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுகள், ஏனைய தனியார் துறை ஆகியவற்றின் கீழ் பாகுபடுத்தும் இடர்ப்பாட்டினால் இவை இங்கே காட்டப்பட்டுள்ளன.

* 1972ஆம் ஆண்டு செத்தெம்பர்–டிசெம்பர் காலப்பகுதியில் ஏற்பட்ட வர்த்தக வங்கி ஊழியர் வேலை நிறுத்தத்தினால், 1972ஆம் ஆண்டிற்கான எண் தொகைகள் மாறுபடக்கூடுமாகையால் மிகச்சாவதானத் விளக்கம் கொடுபடல் வேண்டும்.

முன்னையவாறு மற்றைய உள்நாட்டுத் தனியார் துறைத் தொழிற்பாடுகள், ரூ. 399 இலட்சத் தேறிய மூலவளங்கள் கிடைப்பனவிற்கு வழிவகுத்தது; இத்துறையின் முற்பணங்கள், முதலீடுகள் ரூ. 2,412 இலட்சத்துக்கு உயர்ந்தபோதிலும், ரூ. 2,811 இலட்சத்தை அடைந்த வைப்புக்களின் ஒருங்கிணைந்த உயர்ச்சி தேறிய கொடுகடன் மிகைக்கு வகையாயிற்று.

வங்கி முறைகளால் வளர்ந்த நிதிகள் ரூ. 3,213 இலட்சத்தை அடைந்த வேளையில் அமைப்பில் அடங்கிய பயன்பாட்டில் ரூ 1,100 இலட்சமாயிற்று, இது, கடன் நோக்கங்கட்கெனப் பயன்படுத்தற்கான ரூ. 2,104 இலட்ச தேறிய கிடைப்பனவிற்கு வழிவகுக்க. 1973இன் குறை ரூ. 262 இலட்சமாகும். 1974ல் உயர்வடைந்த கிடைப்பனவு நிதிகள் பெரும்பாலும் வழக்கத்திற்குப் புறநடையாக வங்கிகளின் பெருமளவு வேறு உயர்ச்சிப் பொறுப்புக்களிலிருந்தும் அவற்றின் முதல் ஒதுக்கீடுகளினின்றும் எழுந்தன. வங்கியியல் அமைப்பினுள் மூலவளங்களைப் பயன்படுத்துகையில் தேறிய வங்கியிடை நடப்பனவுகள், உண்டியல் காசு என்பன பெருமளவு உயர்ச்சிகளைக் காட்டின.

## 2. (ஈ) தனியார் துறைக்கு வர்த்தக வங்கிக் கொடுகடன்

அட்டவணை II (உ) 9இல் காட்டப்பட்டுள்ளவாறு தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கடன் (அரச கூட்டுத்தாபனங்களும் கூட்டுறவு நிலையங்களும் உள்ளடக்கி) ரூ. 11,728 இலட்சத்தால் அல்லது 49.6 சதவீதத்தால் உயர்ந்தது. இந்த உயர்ச்சியில் அரச கூட்டுத்தாபனங்கட்கான வங்கிக்கடன் ரூ. 6,415 இலட்சம் எனக் கணக்கிடப்பட, கூட்டுறவு நிலையங்கட்கான கடன் ரூ. 1,891 இலட்சமாகக் கணக்கிடப்பட்டது. தனியார் துறைக்கு வெளிநாட்டு வங்கிகள் கொடுத்த கடன் ரூ. 744 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. இது பெருப்பாலும் அவற்றிற்கான மேலதிகப்பற்றுக்கள் குறைப்பினுலாகும். மறுபுறத்தில் இலங்கை வங்கிகள் எல்லா வகையாலும் கடனை ரூ. 12,473 இலட்சத்தால் உயர்த்தின. இது, அரச கூட்டுத்தாபனங்களினதும், கூட்டுறவு நிலையங்களினதும் கடன் பெறுகைகளின் உயர்ச்சியைக் காட்டுகிறது இவைகள் இலங்கை வங்கிகளிடம் மட்டுமே வைப்புச் செய்கின்றன,

அரச கூட்டுத்தாபனங்கட்கு இந்தக் கடனின் உயர்ச்சி பல காரணங்களால் உருவாகின. அவைகளிற் தலையாய சில, அவற்றின் இறக்குமதிகளின் விலைகள் உயர்ச்சி, பொருள் இருப்பினை உயர்த்தும் நோக்கம், கூட்டுத்தாபனங்களின் நடைமுறை இயக்க இழப்புகட்கு ஈட்டம்செய்தல் என்பன. இறக்குமதிகளின் விலை உயர்ச்சியால் தனியார் துறையின் கடன் தேவைகள் உயர்ந்தாலும் அவற்றின் பெறுகைகளின் அளவுமுறை கூட்டுத்தாபனங்களைவிடக் குறைந்ததாகும். கூட்டுறவு நிலையங்களுக்கான வங்கிக்கடனின் உயர்ச்சியானது பெரும்பாலும் உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் கொள்வனவுகட்கு ஈட்டம் செய்யவும் வேளாண்மைக் கடன்கட்கும் அமைந்திருந்தது. நெல்லிற்கு உயர்த்தப்பட்ட உத்தரவாத விலையும், மீளச் செலுத்தப்பட்ட முற்பணங்களின் குறைவான அளவும் அவற்றின் உயர் மட்டங்களுக்குக் காரணமாயிற்று வேளாண்மைக் கடனைப் பொறுத்தமட்டில் பொருட்களால் இக்கடனின் அளவை உயர்த்தியமை எப்பயிர்கள்மீது கடன்கள் கொடுக்கப்பட்னவோ அவற்றின் அடக்கலை

விரிவாக்கியமை, முன்பு கடன்பெற்று செலுத்தத் தவறியமையால் தகைமை பெருதவர்களைச் சேர்த்தமை என்பன இவ்வகைக் கொடுகடன் உயர்ச்சிக்கு ஏதுவாயின முன்பு கூறப்பட்டவாறு வேளாண்மைக் கடனைக் குறிப்பாக நில விய நனி வரட்சியால் குறைந்தளவில் மீளச் செலுத்தியமை, என்பனவும் ஆண்டு முடிவில் கடன்களின் நிலுவை அளவு உயர்விற்கு ஏதுவாயின.

## அட்டவணை II (உ) 9

### தனியார் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள்*

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | இலங்கை வங்கிகள் | | | அந்நிய வங்கிகள் | | | சகல வங்கிகளும் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1973 திசெம்பர் | 1974 திசெம்பர் | மாற்றம் 1973 திசெம்./ 1974 திசெம். | 1973 திசெம்பர் | 1974 திசெம்பர் | மாற்றம் 1973 திசெம்./ 1974 திசெம். | 1973 திசெம்பர் | 1974 திசெம்பர் | மாற்றம் 1973 திசெம்./ 1974 திசெம்பர் |
| (அ) சேர்க்கை முறையிலுள்ள பண விடயங்கள்** | 109.6 | 238.8 | + 129.2 | 3.1 | 4.8 | + 1.7 | 112.7 | 243.6 | + 130.9 |
| (ஆ) உள்ளூர் உண்டியல்கள் | — | — | — | — | — | — | — | — | — |
| (இ) இறக்குமதி உண்டியல்கள் | 42.1 | 119.9 | + 77.8 | 8.2 | 4.2 | — 4.0 | 50.4 | 124.1 | + 73.7 |
| (ஈ) ஏற்றுமதி உண்டியல்கள் | 78.9 | 178.8 | + 99.9 | 123.1 | 125.0 | + 1.9 | 202.0 | 303.8 | + 101.8 |
| (உ) மேலதிகப்பற்றுக்கள் | 527.0 | 784.1 | + 257.1 | 342.7 | 235.5 | —107.2 | 869.7 | 1019.6 | + 149.9 |
| (ஊ) கடன்கள் | 1040.7 | 1724.0 | + 683.3 | 86.9 | 120.1 | + 33.2 | 1127.6 | 1844.1 | + 716.5 |
| மொத்தம் | 1798.3 | 3045.6 | + 1247.3 | 564.0 | 489.6 | — 74.4 | 2362.4 | 3535.2 | + 1172.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* அரசாங்கக் கூட்டுத்தாபனங்களையும் உள்ளடக்கும்.

** சேகரிப்புக்கென்று அனுப்பப்பட்ட காசோலைகள், காசுக் கட்டளைகள் ஆகியவற்றையும், உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கென்று நிதி உதவி செய்வதற்காக கூட்டுறவு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட குறுந்தவணை முற்பணங்களையும் இப் பகுப்பு உள்ளடக்குகின்றது.

தனியார்துறை கொடுகடன் உயர்ச்சிக் கேள்விக்கு இயங்கிய காரணிகள் ஒவ்வொரு வகை முற்பணங்களிலும் தெளிவாகத் தெரிகின்றது. குறிப்பாக, சேர்ப்புநிலையில் ஏற்பட்ட காசு விடயங்களின் உயர்ச்சியானது உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் கொள்வனவுகள் தேவைகட்கு உயர்த்தப்பட்ட கொடு கடனினலாகும். 1974இல் நெற் சந்தைப்படுத்தற் சபையின் நெல் கொள் வனவுகளின் அளவு குறைவெனினும், உயர் கொள்வனவு விலை இத்தேவைக் கான முற்பணங்களின் கேள்வி உயர்வுக்குக் காரணமாகும். வங்கிகள் வைத் திருந்த இறக்குமதி உண்டியல்களின் பெறுமதி ரூ. 737 இலட்சத்தால் உயர்ந் தது. அரச கூட்டுத்தாபனங்களின் இறக்குமதிகளே இம்முழு உயர்ச்சிக்கும்

காரணமாகும் இந்த ஆண்டில் வங்கிகள் வைத்திருந்த ஏற்றுமதி உண்டியல்களின் பெறுமதி ரூ. 1,018 இலட்சத்தால் உயர்ந்தது. முன்பு குறிப்பிடப்பட்டவாறு, 1974இல் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு உயர்விலைகள், உண்டியல்களைக் காசாக்கும் கால எல்லையை நீடித்தமை என்பன இவ்வுயர்ச்சிக்கு ஏதுவாயின. முன்னைய ஆண்டுபோல் வெளிநாட்டில் நிலவிய உயர் கழிவு வீதம் வர்த்தக வங்கிகளை வெளிநாட்டில் வைத்திருந்த மீதங்கள், சொத்துக்களைக் காசாக்குவதற்கான ஊக்கத்தைக் கெடுத்தமை ஏற்றுமதி உண்டியல்களின் உயர்வளவு பெறுமதிக்குக் காரணமாயிற்று.

கடன்கள் மேலதிகப் பற்றுக்களின் மொத்த அளவானது முறையே ரூ. 1,499 இலட்சத்தாலும் ரூ. 7,165 இலட்சத்தாலும் உயர்ந்தன. இவ்விரு வகையான முற்பணங்களின் மொத்த உயர்ச்சியில் மேலதிகப்பற்றுக்களின் உயர்ச்சி, விகிதத்தாலும் அளவிலும் சிறியதாகும் இது 1974ஆம் ஆண்டு மே மாதத்தில் வணிக வங்கியின் கொடுகடன்மீது விதிக்கப்பட்ட உச்சவரம்பினலாகும். இவ் உச்சவரம்பு இல்லாதிருந்தால் முற்பணங்களின் மொத்தம் பெருமளவில் உயர்ந்திருக்கும்.

தனியார் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்களின் தரவினை நோக்கம், முதிர்ச்சியடிப்படையில் அட்டவணை II (உ) 10 தருகின்றது. இவ்வாண்டில் ரூ. 5,765 இலட்சத் தொகையான ஒரு உயர்ச்சியைப் பதிவுசெய்ய, சேர்ப்புக்கான நடைமுறையின் விடயங்களைத் தவிர்த்து. முன்னைய நான்கு காலாண்டுகளில் இக்கொடுகடன்கள் படிப்படியாக உயர்ந்துள்ளன. இவ்வுயர்ச்சியில், அரைப்பங்கு, ரூ. 5,765 இலட்சத் தொகையானது வணிகத் தேவைகளுக்காகும். அதேவேளை ரூ 3,277 இலட்சம் அல்லது 31.2 சதவீதம் கைத்தொழில் ஈட்டத்திற்குமாகும். வீடு கட்டல் தேவைகளுக்கான கொடுகடனும் இவ்வாண்டில் உயர்த்தப்பட்டது. எனினும், அதன் தொடர்புடைய பங்கு. 1973ஆம் ஆண்டைப் போன்றே இருந்தது. ஆனல் வேளாண்மை, நுகர்வு தேவைகளுக்கான பண ஈட்டங்கட்கு வங்கி முற்பணங்களில் அவற்றின் பங்கு வீழ்ச்சியுற்றது. முற்பணத்தின் முதிர்ச்சித் தன்மைத் தாக்கத்தின் பளு குறுகிய காலக் கொடுகடனில் அமைந்திருந்தது. அது தனியார் துறை முற்பணத்தில் 74 6 சதவீதமாகக் கணக்கிடப்பட்டது. 1973இல் தொடர்பான பங்கு 67.6 சதவீதமாகும். குறுகிய காலக் கொடுகடன் பங்கினது உயர்ச்சியின் விளைவால் இடைநிலை, நீண்டகாலக் கடன்களின் விகித அளவு முறையே 25.7 இலிருந்து 19,6 ஆகவும் 6.8 இலிருந்து 5 8 ஆகவும் வீழ்ச்சியுற்றது. 1973 முதல் ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் கைத்தொழில் தேவைகளுக்கான வெளிநின்ற வர்த்தக வங்கி முற்பணங்களின் விரிவான பகுப்பினை அட்டவணை II (உ) 11 தருகின்றது. 1974இல் இவ்வடிப்படையில் மொத்த முற்பணங்கள் ரூ. 3,277 இலட்சத்தால் உயர்ந்தது. இத்தொகையில் 63.4 சதவீதம் அல்லது ரூ. 2,077 இலட்சத்தைப் புடவைக் கைத்தொழில் பெற குடிபானம், புகையிலை, இரசாயன நிலநெய். நிலக்கரித் தொழில் ஆகியன ஒருங்குசேர்ந்து 27.8 சதவீதத்தை அல்லது ரூ. 912 இலட்சத்தைப் பெற்றன. ஆண்டில் பெரும்பாலும், மற்ற துறைகளுக்கான கொடுகடன் மிதமான நிலையில் உயர்ந்தது. ஆயினும், மரம் மரத்திலான உற்பத்திகள், றப்பர், பிளாத்திக்கிலான பொருட்கள், தேயிலை

# அட்டவணை II (உ) 10

## தேவைகளின்படியும், மீள்தற் காலங்களின்படியும் பாகுபடுத்தப்பட்ட வர்த்தக வங்கி முற்பணங்கள்*

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | குறுகியகால 1 ஆண்டிற்கு உட்பட | | நடுத்தரகால 1 தொடக்கம் 5 ஆண்டுகள் வரை | | நீண்டகால 5 ஆண்டுகளுக்கு மேல் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) (7)ன் சத வீதமாக 1 | (3) | (4) (7)ன்சத வீதமாக 3 | (5) | (6) (7)ன் சத வீதமாக 5 | (7) | (8) மொத்தத்தின் சத வீதமாக (7) |
| அ. வர்த்தகம் | | | | | | | | |
| 1973 திசெம்பர் ... | 769.0 | 79.5 | 179.2 | 18.5 | 19.4 | 2.0 | 967.7 | 43.2 |
| 1974 மாச்சு ... | 1,042.0 | 83.9 | 183.3 | 14.7 | 17.2 | 1.4 | 1,242.4 | 46.0 |
| 1974 யூன் ... | 1,108.6 | 84.0 | 193.2 | 14.6 | 17.7 | 1.3 | 1,319.5 | 46.2 |
| 1974 செத்தெம்பர் ... | 1,177.5 | 83.5 | 215.1 | 15.2 | 18.1 | 1.3 | 1,410.6 | 47.6 |
| 1974 திசெம்பர் ... | 1,320.9 | 85.5 | 203.7 | 13.2 | 19.7 | 1.3 | 1,544.2 | 47.0 |
| ஆ. நிதி | | | | | | | | |
| 1973 திசெம்பர் ... | 66.8 | 54.3 | 38.3 | 31.1 | 18.0 | 14.6 | 123.0 | 5.5 |
| 1974 மாச்சு ... | 72.6 | 55.5 | 40.9 | 31.3 | 17.3 | 13.2 | 130.8 | 4.8 |
| 1974 யூன் ... | 57.8 | 52.7 | 35.9 | 32.7 | 15.9 | 14.5 | 109.7 | 3.8 |
| 1974 செத்தெம்பர் ... | 63.7 | 56.6 | 34.6 | 30.8 | 14.1 | 12.5 | 112.5 | 3.8 |
| 1974 திசெம்பர் ... | 75.2 | 60.7 | 34.6 | 27.9 | 13.9 | 11.2 | 123.8 | 3.8 |
| இ. வேளாண்மை | | | | | | | | |
| 1973 திசெம்பர் ... | 228.5 | 67.0 | 103.5 | 30.3 | 9.2 | 2.7 | 341.2 | 15.2 |
| 1974 மாச்சு ... | 272.4 | 68.2 | 117.5 | 29.5 | 9.3 | 2.3 | 399.3 | 14.8 |
| 1974 யூன் ... | 252.9 | 69.1 | 104.0 | 28.4 | 9.0 | 2.5 | 365.9 | 12.8 |
| 1974 செத்தெம்பர் ... | 266.3 | 71.1 | 98.7 | 26.4 | 9.4 | 2.5 | 374.4 | 12.6 |
| 1974 திசெம்பர் ... | 281.8 | 69.0 | 116.9 | 28.6 | 10.0 | 2.4 | 408.6 | 12.4 |
| ஈ. கைத்தொழில் | | | | | | | | |
| 1973 திசெம்பர் ... | 335.1 | 64.8 | 123.5 | 23.9 | 58.0 | 11.2 | 516.7 | 23.1 |
| 1974 மாச்சு ... | 449.5 | 75.0 | 93.2 | 15.6 | 56.4 | 9.4 | 599.1 | 22.2 |
| 1974 யூன் ... | 612.0 | 81.5 | 83.2 | 11.1 | 55.7 | 7.4 | 751.0 | 26.3 |
| 1974 செத்தெம்பர் ... | 515.0 | 72.7 | 110.0 | 15.5 | 83.6 | 11.8 | 708.7 | 23.9 |
| 1974 திசெம்பர் ... | 628.4 | 74.4 | 133.1 | 15.8 | 82.9 | 9.8 | 844.4 | 25.7 |
| உ. வீடமைப்பு | | | | | | | | |
| 1973 திசெம்பர் ... | 3.7 | 4.9 | 42.8 | 56.2 | 29.7 | 39.1 | 76.1 | 3.4 |
| 1974 மாச்சு ... | 5.1 | 5.9 | 48.0 | 55.3 | 33.6 | 38.7 | 86.8 | 3.2 |
| 1974 யூன் ... | 5.8 | 6.4 | 48.8 | 53.9 | 36.0 | 39.7 | 90.6 | 3.2 |
| 1974 செத்தெம்பர் ... | 6.2 | 6.2 | 51.6 | 51.7 | 42.1 | 42.1 | 99.9 | 3.4 |
| 1974 திசெம்பர் ... | 8.2 | 7.4 | 55.1 | 49.8 | 47.3 | 42.8 | 110.6 | 3.4 |
| ஊ. நுகர்வு | | | | | | | | |
| 1973 திசெம்பர் ... | 70.0 | 50.4 | 61.8 | 44.5 | 7.1 | 5.1 | 138.9 | 6.2 |
| 1974 மாச்சு ... | 87.4 | 55.3 | 61.2 | 38.7 | 9.5 | 6.0 | 158.1 | 5.8 |
| 1974 யூன் ... | 67.4 | 47.6 | 68.5 | 48.4 | 5.7 | 4.0 | 141.1 | 5.0 |
| 1974 செத்தெம்பர் ... | 69.3 | 47.4 | 70.4 | 48.2 | 6.5 | 4.4 | 146.2 | 4.9 |
| 1974 திசெம்பர் ... | 70.4 | 49.0 | 68.1 | 47.4 | 5.1 | 3.6 | 143.6 | 4.4 |
| எ. ஏனைய | | | | | | | | |
| 1973 திசெம்பர் ... | 40.0 | 52.3 | 26.4 | 34.5 | 10.1 | 13.2 | 76.5 | 3.4 |
| 1974 மாச்சு ... | 45.0 | 52.2 | 30.9 | 35.8 | 10.3 | 12.0 | 86.2 | 3.2 |
| 1974 யூன் ... | 40.7 | 51.3 | 28.9 | 36.4 | 9.8 | 12.3 | 79.4 | 2.8 |
| 1974 செத்தெம்பர் ... | 66.1 | 58.6 | 35.2 | 31.2 | 11.5 | 10.2 | 112.8 | 3.8 |
| 1974 திசெம்பர் ... | 68.3 | 60.1 | 32.9 | 28.9 | 12.5 | 11.0 | 113.7 | 3.5 |
| ஏ. மொத்தம் | | | | | | | | |
| 1973 திசெம்பர் ... | 1,513.2 | 67.5 | 575.5 | 25.7 | 151.5 | 6.8 | 2,240.2 | 100.0 |
| 1974 மாச்சு ... | 1,974.0 | 73.0 | 575.0 | 21.3 | 153.7 | 5.7 | 2,702.7 | 100.0 |
| 1974 யூன் ... | 2,145.3 | 75.1 | 562.4 | 19.7 | 150.0 | 5.2 | 2,857.7 | 100.0 |
| 1974 செத்தெம்பர் ... | 2,164.1 | 73.0 | 615.6 | 20.8 | 185.3 | 6.2 | 2,965.0 | 100.0 |
| 1974 திசெம்பர் ... | 2,453.2 | 74.6 | 644.4 | 19.6 | 191.4 | 5.8 | 3,289.0 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

* முற்பணங்களாவன கடன்கள், மேலதிகப்பற்றுக்கள், கழிவுபட்ட உண்டியல்கள் ஆகியனவற்றை (சேகரிப்பு நிலையிலுள்ள பணவிடயங்களை நீக்கி) உட்படுத்தும்.

## அட்டவணை II (உ) 11

## கைத்தொழில் தேவைகளுக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | காலப்பகுதி முடிவில் வெளி நிற்கும் தொகை | | | | |
|---|---|---|---|---|---|
| | திசம்பர் 1973 | மாச்சு 1974 | யூன் 1974 | செத்தெம்பர் 1974 | திசம்பர் 1974 |
| 1. உணவு, குடிபானம், புகையிலை ... ... | 10.8 | 10.7 | 11.9 | 86.5 | 55.7 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... ... | 1.0 | 0.5 | 0.6 | 73.3 | 42.5 |
| ஏனையவை ... ... | 9.8 | 0.2 | 11.3 | 13.2 | 13.2 |
| 2. ஆடைகள் ... | 71.1 | 119.5 | 213.5 | 206.3 | 278.8 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... | 18.7 | 61.4 | 155.5 | 125.4 | 186.4 |
| ஏனையவை ... | 52.3 | 58.1 | 58.0 | 81.0 | 92.5 |
| 3. அணியும் ஆடைகளும், தோற் கைத்தொழில்களும் | 23.0 | 23.4 | 23.1 | 27.0 | 24.1 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... ... | 5.7 | 5.5 | 5.8 | 5.4 | 6.1 |
| ஏனையவை | 17.3 | 17.9 | 17.3 | 21.6 | 18.0 |
| 4. மரமும், மரப் பொருட்களும் தளபாடங்களும் உள்ளடங்க ... ... | 11.4 | 13.1 | 8.3 | 4.0 | 8.4 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 9.5 | 10.9 | 5.2 | 1.1 | 4 8 |
| ஏனையவை ... | 1.9 | 2.2 | 3.1 | 2.9 | 3.6 |
| 5. கடதாசியும், கடதாசி உற்பத்திகளும் | 19.9 | 19.4 | 34.3 | 21.0 | 39.5 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், ... | 14.3 | 13.9 | 28.1 | 13.7 | 30.9 |
| ஏனையவை ... ... | 5.6 | 5.5 | 6.2 | 7.3 | 8.5 |
| 6. ரப்பரும், பிளாத்திக்குப் பொருட்களும் | 18.3 | 19.3 | 21.2 | 18.7 | 16.9 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... | 2.0 | 1.7 | 4.3 | 1.7 | 1.3 |
| ஏனையவை | 16.3 | 17.6 | 16.9 | 17.1 | 15.7 |
| 7. இரசாயனப் பொருட்களும், பெற்றோலியமும், நிலக்கரியும் ... ... | 34.0 | 23.2 | 48.0 | 29.7 | 80.3 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 15.6 | 1.2 | 33.0 | 16.8 | 63.2 |
| ஏனையவை | 18.5 | 22.0 | 15.0 | 12.9 | 17.2 |
| 8. உலோகமற்ற கனிப்பொருட்கள் (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர) ... ... | 4.4 | 8.7 | 10.0 | 11.2 | 13.3 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... | 0.2 | 0.2 | 0.2 | 0.1 | 0.2 |
| ஏனையவை | 4.2 | 8.4 | 9.8 | 11.2 | 13.1 |
| 9. அடிப்படை உலோகப் பொருட்கள் ... | 23.3 | 23.9 | 19.9 | 26.7 | 32.5 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... | 12.3 | 11.6 | 11.0 | 13.8 | 21.6 |
| ஏனையவை ... | 11.0 | 12.3 | 8.9 | 12.9 | 10.8 |
| 10. வெட்டப்பட்ட உலோகப் பொருட்கள், இயந்திரவகை, போக்குவரத்துச் சாதனங்கள் ... | 13.4 | 20.7 | 15.5 | 14.2 | 16.9 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | 3.4 | 3.3 | 1·9 | — | — |
| ஏனையவை ... | 10.0 | 17.4 | 13.6 | 14.2 | 16.9 |
| 11. தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் பதனிடுதல்... | 36.3 | 34.8 | 37.0 | 36.4 | 34.1 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | — | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| ஏனையவை ... | 36.3 | 34.7 | 36.9 | 36.3 | 34.0 |
| 12. ஏனைய விவசாயப் பொருட்கள் பதனிடுதல் ... | 8.7 | 6.8 | 3.6 | 3.6 | 4.5 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... | 5.1 | 3.3 | — | — | — |
| ஏனையவை ... ... | 3.7 | 3.5 | 3.6 | 3.6 | 4.5 |
| 13. பொறியியலும், கட்டிட ஆக்கமும் | 60.5 | 72.4 | 87.8 | 81.0 | 81.4 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... | 20.0 | 19.7 | 28.2 | 30.8 | 31.7 |
| ஏனையவை | 40.6 | 52.7 | 59.6 | 50.2 | 49.7 |
| 14. சுரங்கத் தொழிலும், மீன் பிடியும் ... | 21.0 | 24.5 | 27.5 | 31.6 | 31.1 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... ... | 12.0 | 17.0 | 19.9 | 21.9 | 22.3 |
| ஏனையவை | 9.1 | 7.5 | 7.7 | 9.8 | 8.8 |
| 15. ஏனைய கைத்தொழில்கள் ... ... | 160.7 | 178.6 | 189.3 | 110.6 | 126.9 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... ... | 97.8 | 104.8 | 117.9 | 32.2 | 39.6 |
| ஏனையவை ... | 62.9 | 73.8 | 71.3 | 78.4 | 87.2 |
| மொத்தம் ... ... ... | 516.7 | 599.1 | 751.0 | 708.7 | 844.4 |
| அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... ... | 217.5 | 255.3 | 411.9 | 336.1 | 450.7 |
| ஏனையவை ... ... ... | 299.2 | 343.8 | 339.1 | 372.5 | 393.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (உ) 12

### வட்டி வீதங்களின்படியான முற்பணங்கள்*

| வட்டி வீதம் (சத வீதமாக) | 1973 திசெம்பர் 31 | | 1974 மாச்சு 31 | | 1974 யூன் 30 | | 1974 செத்தெம்பர் 30 | | 1974 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சத வீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சத வீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சத வீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சத வீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சத வீதமாக |
| 3½ க்குக் கீழ் ... | 8.9 | 0.4 | 6.9 | 0.3 | 7.8 | 0.3 | 6.4 | 0.2 | 7.8 | 0.3 |
| 3½ ... | 2.7 | 0.1 | 2.9 | 0.1 | 3.0 | 0.1 | 3.2 | 0.1 | 4.1 | 0.1 |
| 4 ... | 3.5 | 0.2 | 3.0 | 0.1 | 3.3 | 0.1 | 3.3 | 0.1 | 5.0 | 0.2 |
| 4½ ... | 7.5 | 0.4 | 7.6 | 0.3 | 2.7 | 0.1 | 3.0 | 0.1 | 2.1 | 0.1 |
| 5 | 66.2 | 3.2 | 67.6 | 2.8 | 66.5 | 2.6 | 53.4 | 2.0 | 62.0 | 2.1 |
| 5½ | 1.3 | 0.1 | 1.2 | ... | 0.8 | ... | 1.2 | ... | 1.0 | ... |
| 6 ... | 28.3 | 1.4 | 31.8 | 1.3 | 27.8 | 1.1 | 25.0 | 0.9 | 24.6 | 0.8 |
| 6½ ... | 28.8 | 1.2 | 41.4 | 1.7 | 23.1 | 0.9 | 23.2 | 0.9 | 31.7 | 1.1 |
| 7 ... | 233.9 | 11.4 | 244.0 | 10.0 | 240.1 | 9.4 | 250.1 | 9.4 | 220.3 | 7.4 |
| 7½ ... | 183.9 | 9.0 | 290.3 | 12.0 | 473.4 | 18.4 | 531.9 | 20.0 | 755.2 | 25.3 |
| 8 ... | 255.0 | 12.5 | 263.7 | 10.9 | 270 6 | 10.5 | 287.4 | 10.8 | 312.3 | 10.5 |
| 8½ ... | 359.9 | 17.6 | 390.3 | 16.1 | 367.7 | 14.3 | 351.4 | 13.2 | 376.6 | 12.6 |
| 9 ... | 244.3 | 11.9 | 286.6 | 11.8 | 287.2 | 11.1 | 276.3 | 10.4 | 292.4 | 9.8 |
| 9½ ... | 161.9 | 7.9 | 236.0 | 9.7 | 237.8 | 9.3 | 238.0 | 8.9 | 242.9 | 8.1 |
| 10 ... | 157.6 | 7.7 | 184.2 | 7.6 | 193.2 | 7.5 | 217.5 | 8.2 | 239.8 | 8.0 |
| 10½ ... | 24.5 | 1.2 | 27.9 | 1.1 | 26.8 | 1.0 | 25.5 | 1.0 | 38.0 | 1.3 |
| 11 ... | 42.7 | 2.1 | 41.3 | 1.7 | 42.8 | 1.7 | 38.2 | 1.4 | 38.7 | 1.3 |
| 11½ ... | 7.0 | 0.3 | 10.8 | 0.4 | 9.4 | 0.4 | 11.0 | 0.4 | 9.2 | 0.3 |
| 12 ... | 233.1 | 11.4 | 290.2 | 11.9 | 282 4 | 11.0 | 318.4 | 11.9 | 322.9 | 10.8 |
| மொத்தம் ... | 2,046.1 | 100.0 | 2,427.7 | 100.0 | 2,566.2 | 100.0 | 2,664.4 | 100.0 | 2,986.8 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* நடைமுறைச் செலாவணி வீதங்களில் கொள்வனவுசெய்யப்பட்ட ஏற்றுமதி உண்டியல்களையும், சேகரிப்பு நிலையிலுள்ள பணவிடயங்களையும் நீக்கி.

## அட்டவணை II (உ) 13

### அடமானங்களின் வகைப்படி பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்*

| | 1973 திசெம்பர் 31 | | 1974 மாச்சு 31 | | 1974 யூன் 30 | | 1974 செத்தெம்பர் 30 | | 1972 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ப.இ.ரூ. | மொத்தத்தின் சதவீதமாக |
| ஆவண உண்டியல்கள் ... ... ... ... | 244.0 | 10.9 | 430.1 | 15.9 | 368.6 | 12.9 | 388.2 | 13.1 | 420.2 | 12.8 |
| அரசாங்கப் பிணைகள் ... ... ... | 63.5 | 2.8 | 66.6 | 2.5 | 75.6 | 2.6 | 74.2 | 2.3 | 71.2 | 2.2 |
| கூட்டுப் பங்கு நிறுவனங்களின் பங்குமுதல் .. .. | 17.9 | 0.8 | 18.2 | 0.7 | 17.8 | 0.6 | 17.0 | 0.6 | 17.1 | 0.5 |
| ஆயுட் காப்புறுதிகளின் பணப்பெறுமதி உட்பட தவணைச் சேமிப்பு வைப்புக்களும், ஏனைய பண வைப்புக்களும் ... | 79.3 | 3.5 | 91.6 | 3.4 | 81.3 | 2.8 | 83.5 | 3.1 | 90.5 | 2.7 |
| வியாபாரக் கையிருப்பு ... ... ... | 467.8 | 20.9 | 479.0 | 17.7 | 505.4 | 17.7 | 491.1 | 18.4 | 504.9 | 15.3 |
| அசைவற்ற சொத்து ... ... ... ... | 217.1 | 9.7 | 215.0 | 8.0 | 230.3 | 8.1 | 243.5 | 9.1 | 257.3 | 7.8 |
| உத்தரவாதங்கள் ... ... ... ... | 315.5 | 14.1 | 346.0 | 12.8 | 337.0 | 11.8 | 360.2 | 13.5 | 393.8 | 11.9 |
| நம்பிக்கை வருவாய்கள் ... ... ... | 18.03 | 8.0 | 255.9 | 9.5 | 495.3 | 17.3 | 514.0 | 19.3 | 654.3 | 19.9 |
| தவணைக் கொள்வனவு உடன்படிக்கைகள் ... .. | 21.4 | 1.0 | 19.1 | 0.7 | 22.3 | 0.8 | 24.1 | 0.9 | 23.6 | 0.7 |
| பொறித் தொகுதியும், இயந்திர வகையும் ... ... | 15.0 | 0.7 | 15.6 | 0.6 | 12.9 | 0.4 | 13.9 | 0.5 | 11.1 | 0.3 |
| இழுபொறிகளும், உந்து ஊர்திகளும் ... ... | 69.2 | 3.1 | 75.5 | 2.8 | 69.9 | 2.4 | 59.0 | 2.2 | 66.9 | 2.0 |
| வாக்குறுதிப் பத்திரங்கள், முறிகள், சலுகை விடுப்புச் சான்றிதழ்கள் ஆகியன ... . | 311.2 | 13.9 | 406.2 | 15.0 | 366.7 | 12.8 | 392.8 | 14.7 | 438 5 | 13.3 |
| ஏனையவை .. ... ... ... .. | 188.4 | 8.4 | 216.7 | 8.0 | 215.2 | 7.5 | 251.0 | 9.4 | 269.8 | 8.2 |
| பிணையற்றவை ... ... ... ... | 49.5 | 2.2 | 67.2 | 2.5 | 59.4 | 2.1 | 52.4 | 2.0 | 69.7 | 2.1 |
| மொத்தம் ... | 2,240.2 | 100.0 | 2,702.7 | 100.0 | 2,857.7 | 100.0 | 2,965.0 | 100.0 | 3,289.0 | 100.0 |

*சேகரிப்ப நிலையிலுள்ள பண விடயங்களை நீக்கி.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

யைப் பதனிடல், தெங்கு, வேளாண்மைப் பண்டங்கள் என்பன தவிர்க்கப் படுகின்றன. 'மற்றைய' எனப் பாகுபடுத்தப்பட்ட கைத்தொழில்கள் யாவும் வர்த்தக வங்கிகளிடமிருந்து பெறுகைகளின் மட்டத்தைக் குறைத்தன. உயர்ந்த ரூ. 3,277 இலட்சக் கொடுகடன் பங்கீட்டில் அரச கூட்டுத்தாபனங்கள் ரூ. 2,332 இலட்சம் அல்லது 71.2 சதவீதத்தைக் கணக்கிட, தனியார் துறை மீதிக்கு வகைகூறியது. வட்டி வீத அளவுகளால் பாகுபடுத்தப்பட்ட முற் பணங்களை அட்டவணை II (உ) 12 காட்டுகின்றது. முற்பணங்களில் உயர் செறிவு தொகையான ரூ. 7,552 இலட்சம் அல்லது 25 சதவீதத்திற்கு மொத் தத்தில் $7\frac{1}{2}$ சதவீதமாகும். பெரிய பங்கிற்கு 1973இன் இறுதியில் $8\frac{1}{2}$ சதவீத மாகும். $7\frac{1}{2}$ சதவீத வட்டி அளவுகள் மீதான பாகுபாடு, ஆண்டின் இரண்டாம் காலாண்டு முதல் தெளிவாகின்றது. 1974இல் வட்டியாக 7 சதவீதத்திற்குக் குறைவாகவும் 9 சதவீதத்திற்குள் உயர்வாகவும் வழங்கப்பட்ட கடன்களின் பங்கு முறையே 7.0 இலிருந்து 4.7 சதவீதமாகவும் 30.6 சதவீதத்திலிருந்து 29.8 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்தது. மறுபுறத்தில் 7 இலிருந்து 9 சதவீத அளவுகளில் வழங்கப்பட்ட கடன்கள் 62.4 லிருந்து 65.6 சதவீதமாக உயர்ந்தது.

## 2. (உ) கிளையமைப்பு

1964-74 காலப்பகுதியில் இலங்கை வங்கிக்கும் வெளிநாட்டு வங்கிகளுக்கு மிடையிலுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் பற்றியும், வங்கியலுவலகங் களின் பரம்பலின் தன்மை பற்றியும் அட்டவணை II (உ) 14 தருகின்றது.

வர்த்தக வங்கியலுவலகங்களின் எண்ணிக்கை 1973இல் 99 ஆக அதிகரித்த மைக்கு மாறாக, 1974இல் 194ஆல் அதிகரித்தமையால் 1974இன் கிளை பிரிவு களில் கணிசமான வளர்ச்சியொன்று காணப்பட்டது. மொத்தம் 154இல் இலங்கை வங்கியின் 126 புதிய கிளைகளும், 123 வேளாண்மைப்பணி நிலையக் கிளைகளாயிருந்தன. இத்தகைய பணி நிலையக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை ஆண்டு முடிவில் 202 ஆக அதிகரித்தது. இவ்வலுவலகங்களின் மாவட்ட அடிப்படையிலான பகுப்பாய்வு, அட்டவணை II (உ) 14 - அ வில் தரப்பட் டுள்ளது. இவ்வங்கியின் ஏனைய மூன்று கிளையலுவலகங்களும், மானிப்பாயில் திறக்கப்பட்ட அலுவலகத்தையுள்ளடக்கி, எல்லா வங்கித்தொழில் வசதிகளை யும், இரண்டு கொடுப்பனவு அலுவலகங்களையும் கொண்டனவாக கொழும்பில் உள்நாட்டிறைவரித் திணைக்களத்தாலும், சுங்கத் திணைக்களத்தாலும் தாபிக் கப்பட்டன.

முந்திய ஆண்டில் திறக்கப்பட்ட 11 புதிய கிளையலுவலகங்களுடன் ஒப் பிடுகையில் மக்கள் வங்கி 22 புதிய கிளையலுவலகங்களைத் திறந்தது. இத்து டன் மக்கள் வங்கி அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை 153 ஆக அதி கரித்தது. புதிய 22 கிளை அலுவலகங்களும், அக்குறண, அளவை, புத்தளம், முடம்புல்ல, தெனியாய, டிக்வெல்ல, தியத்தலாவ, கசலக, கெட்டிபொல ஹிக்கடுவ, கம்புறுபிட்டி, கெபிட்டி, கொலாவ, கொச்சிக்கடை, மாகந்துற, மாத்தறை, நாவல, நுவரெலியா, பாணந்துறை, புறக்கோட்டை, சுதுவெல, வல்வெட்டித்துறை, வெள்ளவத்தை ஆகிய இடங்களில் திறக்கப்பட்டன.

## அட்டவணை II (உ) 14

### வங்கி அலுவலகங்களினதும்* வைப்புக்களினதும் பங்கீடு 1964 — 1974

| ஆண்டு | மொத்தம் | | | இலங்கை வங்கிகள் | | | பிரித்தானிய வங்கிகள் | | | இந்திய, பாகிஸ்தானிய வங்கிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | |
| | | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | % | | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | % | | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | % | | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | % |
| 1964 | 88 | 1,447 | 100 | 72 | 943 | 65 | 12 | 415 | 29 | 4 | 90 | 6 |
| 1965 | 97 | 1,546 | 100 | 81 | 1,023 | 66 | 12 | 431 | 28 | 4 | 92 | 6 |
| 1966 | 105 | 1,502 | 100 | 89 | 1,003 | 67 | 12 | 419 | 28 | 4 | 80 | 5 |
| 1967 | 133 | 1,637 | 100 | 117 | 1,157 | 71 | 12 | 404 | 25 | 4 | 76 | 5 |
| 1968 | 141 | 1,808 | 100 | 125 | 1,329 | 73 | 12 | 409 | 23 | 4 | 71 | 4 |
| 1969 | 155 | 1,917 | 100 | 140 | 1,405 | 73 | 11 | 437 | 23 | 4 | 74 | 4 |
| 1970 | 165 | 2,394 | 100 | 152 | 1,831 | 76 | 9 | 472 | 20 | 4 | 91 | 4 |
| 1971 | 189 | 2,516 | 100 | 176 | 1,951 | 77 | 9 | 471 | 19 | 4 | 94 | 4 |
| 1972 | 204 | 3.277 | 100 | 191 | 2,707 | 82 | 9 | 471 | 14 | 4 | 99 | 3 |
| 1973 | 303 | 3,169 | 100 | 293 | 2,584 | 82 | 6 | 487 | 15 | 4 | 98 | 3 |
| 1974 | 457 | 3,555 | 100 | 449 | 3,036 | 85 | 4 | 407 | 11 | 4 | 112 | 3 |

குறிப்பு: 1969ஆம் 1970ஆம் 1973ஆம் 1974ஆம் ஆண்டுகளில் பிரித்தானிய வங்கிகளின் எண்ணிக்கைக் குறைவிற்குப் பின்வருவன காரணமாயிருக்கலாம்.

1. 1969 ஆம் ஆண்டில் ஈஸ்ரேன் வங்கி லிமிடெட்டை இலங்கையர் வங்கியாக மாற்றியமை.
2. 1970 இல் அட்டன் தேசிய வங்கியை அமைப்பதற்காக அட்டன் வங்கியையும், நஷனல் அன்ட் கிறின்ட்லேய்ஸ் வங்கியின் இரு கிளைகளேயும் மாற்றியமைத்தமை.
3. 1973ஆம் ஆண்டில் இலங்கை வர்த்தக வங்கி லிமிடெட், மார்கன்ரைல் வங்கி லிமிடெட்டின் மூன்று கிளைகளேப் பெற்றது.
4. 1974ஆம் ஆண்டு ஏப்பிரல் 1ஆம் திகதி தொட்டு மேக்கன்ரையில் வங்கியின் சொத்துக்களே யும், மொத்தக்கடன்களேயும் அட்டன் தேசிய வங்கி பொறுப்பேற்றமை இதன் விளைவாக மேக்கன்ரையில் வங்கி அலுவலகங்கள் அட்டன் தேசிய வங்கியின் பொறுப்புக்குள்ளாகியது.

* 1971, 1972 இல் திறக்கப்பட்ட கச்சேரி அலுவலகங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

## அட்டவணை II (உ) 14-அ

### இலங்கை வங்கியின், வேளாண்மைப் பணி நிலையக் கிளைகளின் பரம்பல்

| மாவட்டம் | 1974இல் திறக்கப்பட்டவை | மொத்தம் |
|---|---|---|
| 1. அம்பாறை | 2 | 2 |
| 2. அனுராதபுரம் | 13 | 32 |
| 3 பதுளை | 3 | 3 |
| 4. மட்டக்களப்பு | 3 | 3 |
| 5. கொழும்பு | 7 | 11 |
| 6. காலி | 13 | 19 |
| 7. அம்பாந்தோட்டை | 1 | 5 |
| 8. யாழ்ப்பாணம் | 9 | 9 |
| 9. களுத்துறை | 9 | 11 |
| 10. கண்டி | 11 | 23 |
| 11. கேகாலை | — | 7 |
| 12. குருநாகல் | 15 | 21 |
| 13. மன்னார் | 3 | 3 |
| 14. மாத்தளை | 8 | 17 |
| 15. மாத்தறை | 6 | 7 |
| 16. மொனருகலை | 4 | 6 |
| 17. நுவரெலியா | 1 | 2 |
| 18. பொலனறுவை | 6 | 8 |
| 19. புத்தளம் | 2 | 3 |
| 20. இரத்தினபுரி | 2 | 3 |
| 21. திருகோணமலை | 3 | 5 |
| 22. வவுனியா | 2 | 2 |
| மொத்தம் | 123 | 202 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கற்றன் நாசனல் வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கை 22 ஆக அதிகரிக்கப்பட்டபோது, அவற்றின் 8 அலுவலகங்கள் 1974இல் திறக்கப்பட்டன. பதுளை, காலி, ககவத்தை, கெபிற்றிகெலான, குருநாகல், திருகோணமலை ஆகிய இடங்களிலும், கொழும்பில் இராணி வீதியிலும் புறக்கோட்டையிலும் இவை திறக்கப்பட்டன. வர்த்தக வங்கியின் அலுவலகங்கள், கற்றன் நாசனல் வங்கியினால் கையேற்கப்பட்டமையினாலேயே இரண்டு அலுவலகங்கள் கொழும்பில் திறக்கப்பட்டன. இது, பிரித்தானிய வங்கிகளின் எண்ணிக்கையை 6 இலிருந்து 4 ஆகக் குறைப்பதற்குரிய ஒரு காரணமுமாகும். மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் கொள்ளுப்பிட்டியிலும் வெள்ளவத்தையிலும் இரு புதிய கிளை அலுவலகங்களைத் திறந்ததன்மூலம் இலங்கை வர்த்தக வங்கி தனது அலுவலகங்களின் எண்ணிக்கையை 9 ஆக அதிகரித்தது.

1974இல் தேசிய சேமிப்பு வங்கியின் கிளையமைப்பிலும் ஒரு குறிப்பிடத்தக்க விரிவு ஏற்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் 13 அலுவலகங்கள் திறக்கப்பட்டமை இதன் அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கையை 19 ஆக்கியது. இப்பதின்மூன்று அலுவலகங்களும் அம்பலாந்தோட்டை, சிலாபம், ஹிங்

## அட்டவணை II (உ) 15

### நீண்டகாலக் கொடுகடன் நிலையங்களின் கடன் வழங்கும் தொழிற்பாடுகள்

ஆயிரம் ரூபாய்களில்.

| | 1970 | | 1971 | | 1972 | | 1973 | | 1974 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வழங்கப் பட்ட கடன்கள் | வெளி நிற்கும் தொகை | வழங்கப் பட்ட கடன்கள் | வெளி நிற்கும் தொகை | வழங்கப் பட்ட கடன்கள் | வெளி நிற்கும் தொகை | வழங்கப் பட்ட கடன்கள் | வெளி நிற்கும் தொகை | வழங்கப் பட்ட கடன்கள் | வெளி நிற்கும் தொகை |
| 1. அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (அ) ... ... | 27,082 | 70,920 | 6,439 | 71,422 | 2,832 | 66,168 | 13,593 | 71,088 | 13,605 | 73,627 |
| 2. இலங்கைச் சேமிப்பு வங்கி (ஆ) ... ... | 4,563 | 22,803 | 3,082 | 23,517 | 3,848 | 24,698 | 4,285 | 25,990 | 7,247 | 29,640 |
| 3. கமத்தொழிற் கைத்தொழிற் கடனுதவிக் கூட்டுத்தாபனம் ... | 4,719 | 31,552 | 3,296 | 31,108 | 1,751 | 29,839 | 1,049 | 28,295 | 1,927 | 27,789 |
| 4. அரசாங்க ஈட்டு வங்கி ... ... | 9,456 | 66,995 | 6,900 | 68,757 | 4,202* | 69,113 | 6,393 | 70,541 | 7,966 | 70,002 |
| 5. கடன் சபை .. ... | 2,459 | 11,858 | 1,926 | 12,570 | 1,351 | 12,825 | 1,755 | 13,494 | 1,503 | 13,633 |
| 6. தேசிய வீடமைப்புத் திணைக்களம் (இ) ... ... | 15,056 | 127,386 | 12,370 | 131,667 | 12,616 | 133,440 | 12,423 | 140,310 | 28,373 | 160,589 |
| மொத்தம் ... ... | 63,335 | 331,514 | 34,013 | 339,041 | 26,600 | 336,083 | 39,498 | 349,718 | 60,621 | 375,280 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* வங்கி ஊழியர் வேலைநிறுத்தத்தினால் செத்தெம்பர், ஒற்றோபர், நவெம்பர் மாதங்களுக்குரிய எண்தொகைகள் கிடைக்கத்தக்கனவாயில்லை.

(அ) பங்கு முதலீடுகளை உட்படுத்தும்.

(ஆ) தேசிய சேமிப்பு வங்கியானது, 1.4.72 தொடக்கம் இலங்கைச் சேமிப்பு வங்கியின் இருப்புச் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் ஏற்றது.

(இ) எண்தொகைகள் ஒற்றோபர்/செத்தெம்பர் நிதியாண்டுக்குரியனவாகும். 1973 நிதியாண்டு கலண்டர் ஆண்டு அடிப்படையில் மாற்றப்பட்டது.

குராங்கொடை, களுத்துறை, கண்டி, கேகாலை, கெக்கிராவை, கிளிநொச்சி, குளியாப்பிட்டி, குருநாகல், நீர்கொழும்பு, இரத்தினபுரி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன. இவ்வாண்டில் வர்த்தக வங்கியின் மொத்த வைப்புக்கள் ரூ. 3,860 இலட்சத்தால் அல்லது 12.2 சதவீதத்தால் அதிகரித்தன. இவற்றில் இலங்கை வங்கிகளில் 1973இல் 81 சதவீதமானவை வைக்கப்பட்டிருந்தன. தவணை சேமிப்பு வைப்புக்கள் 81.5 சதவீதத்திலிருந்து 86.8 சதவீதமாக அதிகமாக அதிகரித்தபோது வைப்புக்களின் உள்ளடக்கத்தில் இலங்கை வங்கிகளின் கேள்வி வைப்பு இருப்புக்கள் 81.5 சதவீதத்திலிருந்து 84.1 சதவீதமாக அதிகரித்தன. இந்திய பாக்கித்தான் வங்கிகள் தமது பங்குகளைத் தொடர்ந்து, வைத்திருக்கும்போது இவ்வெல்லா மாற்றங்களிலும், பிரித்தானிய வங்கிகள் தமது வைப்பு இருப்புக்களில் தொடர்பான வீழ்ச்சியைப் பதிவு செய்தன. 1974இல் இலங்கை வங்கிகளில் ஏற்பட்ட விரைவான விரிவே, அவற்றின் வைப்புக்களிலேற்பட்ட பெருமளவு அதிகரிப்புக்குக் காரணமாகும். பிரித்தானிய வங்கிகளின் அலுவலகங்களில் எண்ணிக்கைக் குறைப்பு அதாவது அற்றன் நாசனல் வங்கியினூல், வர்த்தக வங்கியின் இரண்டு கிளைகள் கையேற்புச் செய்யப்பட்டமை அவர்கள் வைத்திருந்த வைப்புக்களின் பங்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மிகப்பெரிய அளவில் பொறுப்பாயமைந்தது.

## 3 சேமிப்பு நிறுவனங்களும் நீண்ட தவணைக் கொடுகடன் நிறுவனங்களும்

அரசாங்கத்தால் நிறுவப்பட்ட சேமிப்பு நிறுவனங்களினதும், கடன் வழங்கும் நிறுவனங்களினதும் கடன் வழங்கும் தொழிற்பாடுகளின் புள்ளிவிபரங்கள் அட்டவணை II (உ) 15இல் கொடுக்கப்பட்டுள்ளன. 1974 இல் இந்நிறுவனங்களினூல் வழங்கப்பட்ட கடன் ரூ. 211 இலட்சமானது, குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவுசெய்தது. தேசிய வீடமைப்புத் திணைக்களம் கடன் வழங்கலை 160 இலட்சத்தால் அதிகரித்தமை அதன் பெருமளவு உயர்ச்சிக்குக் காரணமாயிருந்தது.

### அட்டவணை II (உ) 16
### சேமிப்பு வைப்புக்களும் சேமிப்புச் சான்றிதழ்களும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1972 திசெம்பர் | 1973 திசெம்பர் | 1974 திசெம்பர் | மாற்றம் 1972/73 | மாற்றம் 1973/74 |
|---|---|---|---|---|---|
| தேசிய சேமிப்பு வங்கி [1,2] ... | 966.6* | 1,146.9* | 1.341.5* | + 180.3* | + 194.6 |
| வர்த்தக வங்கிகள் (தவணை சேமிப்பு வைப்புக்கள்) [3] ... | 1,525.0** | 1,411.8 | 1,660.8 | — 113.2** | + 249.0 |
| தேசிய சேமிப்பு வங்கி சேமிப்புச் சான்றிதழ்கள் [2] ... | 65.2 | 98.0 | 106.9 | + 32.8 | + 8.9 |
| மொத்தம் ... | 2,556.8* | 2,656.7* | 3,109.2* | + 99.9* | + 452.5* |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1 நிலையான வைப்புக்களை உள்ளடக்கும்.

2 தேசிய சேமிப்பு வங்கி, 1-4-72 தொடக்கம் அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியினதும், இலங்கைச் சேமிப்பு வங்கியினதும், சேமிப்புச் சான்றிதழ் நிதியினதும் இருப்புச் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் ஏற்றது.

3 அரசாங்க வைப்புக்களை உள்ளடக்கும்.

* இவ்வெண்தொகைகள் திருத்தத்திற்குட்பட்டவை.

** ஓகத்து இறுதியில் உள்ளவாறு.

அட்டவணை II (உ) 10இல், முன்பு காட்டப்பட்டதுபோல, வீடமைப்புக்கான வர்த்தக வங்கிகளின் கடன்கள், 1974ஆம் ஆண்டில் கணிசமானளவால் அதிகரித்தது. மேலும், தேசிய சேமிப்பு வங்கியினுல் வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 43 இலட்சத்தில் இருந்து ரூ. 72 இலட்சமாக அதிகரித்தது. மேலும், இவ்வாண்டில் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், வேளாண்மைக் கைத்தொழில் கடன் கூட்டுத்தாபனம், அரச ஈட்டு வங்கி என்பவற்றுல் வழங்கிய கடன்களும் சிறிதளவால் ஆகிலும் அதிகரித்தே காணப்பட்டது. கடன் சபையினுல் வழங்கப்பட்ட கடன்களில் எல்லையளவான வீழ்ச்சி காணப்பட்டது.

அட்டவணை II (உ) 16வது 1972–74ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சேமிப்புச் சான்றிதழ்கள், சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட அசைவுகளைச் சுருக்கித் தருகின்றது,

சேமிப்பு வைப்புக்களிலும் சேமிப்புச் சான்றிதழ்களிலும் 1974ஆம் ஆண்டில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டு, ரூ. 4,525 இலட்சமாகியது. அண்மை ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட ஆகக்கூடுதலான அதிகரிப்பு இதுவாகும். மாற்றத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அம்சமென்னவெனில் வர்த்தக வங்கிகளின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் ரூ. 2,490 இலட்சத்தால் பெரிதளவால் அதிகரித்தது. கிராமியத் துறையில் பொருட்களுக்கு ஏற்பட்ட உயர்வான சந்தை விலைகளினுல், பொருளாதார முயற்சிகள் வளர்ச்சியடைந்தமையினுல் பல கிளைகள் கொண்ட வர்த்தக வங்கிகளின் ஆற்றல் மூலம் சேமிப்புக்களைத் திரட்டக்கூடியதாக இருந்ததும், இவ்வைப்புக்கள் அதிகரிப்பதற்குக் காரணமாகும்.

1974ஆம் ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கியானது, தனது கிளைகளை இரண்டு மடங்கிற்கு மேலாக்கியது. மேலும். சேமிப்புக்களைத் திரட்டுவதற்குத் மேலதிகத் தூண்டுதல்களைத் தொடர்ந்து வழங்கியது. இதன் விளைவாக, இந்நிறுவனமானது வைப்பு மட்டத்தினை ரூ. 1946 இலட்சத்தால் அதிகரிக்கக் கூடியதாக இருந்தது. மேலும், இவ்வாண்டில் சேமிப்புச் சான்றிதழ்களும் மிதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தன.

ஊழியர் சேமலாப நிதியின்படி கிடைக்கப்பெற்ற மொத்த உதவுதொகைகள் ரூ. 2089 இலட்சங்களாக 1974ஆம் ஆண்டில் விளங்கிய வேளையில் 1973ஆம் ஆண்டில் ரூ. 1883 இலட்சங்களாக விளங்கியது.

## 4. தவணைக் கொள்வனவு நிதிக் கூட்டு நிலையங்கள்

தவணைக் கொள்வனவுக் கூட்டு நிலையங்களது நிதிகளின் மூலங்கள், தொழிற்பாடுகள் பின்வரும் அட்டவணைகள் II (உ) 17, 18இல் காட்டப்பட்டுள்ளன.

## அட்டவணை II (உ) 17

### தவணைக் கொள்வனவு நிதிக் கூட்டுநிலையங்களின் தொழிற்பாடுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1974 டிசெம்பர் 31இல் உள்ளவாறு | 1973 மாச்சு 31இல் உள்ளவாறு | 1974 யூன் 30இல் உள்ளவாறு | 1974 செத்தெம்பர் 30இல் உள்ளவாறு | 1974 டிசெம்பர் 31இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|
| 1. வைப்புக்கள் ... | 104.0 | 116.8 | 114.6 | 110.1 | 105.0 |
| 2. வெளிநிற்கும் தவணைக் கொள்வனவு வியாபாரம் ... | 86.7 | 93.7 | 84.5 | 84.0 | 74.9 |
| 3. வெளிநிற்கும் கடன்கள் ... | 22.3 | 24.8 | 23.2 | 21.7 | 19.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

*தற்காலிகமானவை

## அட்டவணை II (உ) 18

### தவணைக் கொள்வனவு நிதிக் கூட்டுநிலையங்களின்—நிதி மூலங்கள்
### மொத்தப் பொறுப்புக்களின் சதவீதமாக

| | 1973 டிசெம்பர் 31இல் உள்ளவாறு | 1974 மாச்சு 31இல் உள்ள வாறு | 1974 யூன் 30இல் உள்ள வாறு | 1974 செத்தெம்பர் 30இல் உள்ள வாறு | 1974 டிசெம்பர் 31இல் உள்ள வாறு |
|---|---|---|---|---|---|
| 1. மூலதனக் கணக்குகள் ... | 17.4 | 18.0 | 18.6 | 17.4 | 15.9 |
| 2. வைப்புக்கள் ... | 62.9 | 62.6 | 62.4 | 63.7 | 63.5 |
| 3. கடன்பாடுகள் ... | 13.6 | 11.4 | 11.7 | 11.3 | 14.2 |
| 4. ஏனைய பொறுப்புக்கள் ... | 6.1 | 8.0 | 7.2 | 7.5 | 6.4 |
| | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* தற்காலிகமானவை

### 5. மத்திய வங்கித் தொழில்

இலங்கை மத்திய வங்கியின் சொத்துக்களும், மொத்தக் கடன்களும் 1974ஆம் ஆண்டில் ரூ. 4101 இலட்சத்தால் அல்லது 8.8 சதவீதத்தால் அதிகரித்தது [1] சொத்துக்கள் அதிகரிப்பதற்குக் காரணமாகவிளங்கிய தனிக்காரணம் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களாகும். இது ரூ. 4,465 இலட்சம் கொண்ட கணிசமான அதிகரிப்பினைக் காட்டியது. வர்த்தக வங்கிகளிடமான கடனுதவிக்கான கேள்வி என்றுமில்லாதளவு அதிகரித்தது. குறிப்பாக

அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிடமிருந்து ஏற்பட்டது. எனவே, வங்கிகள் மத்திய வங்கியின் உதவியை நாடவேண்டிய கட்டாயமேற்பட்டது. அரசாங்கத்திற்கு மத்திய வங்கி வழங்கிய தற்காலிக முற்பணங்களும், உள்நாட்டுச் சொத்துக்கள் வளர்வதற்குக் காரணமாயிற்று ஆனுல், இது ரூ. 391 இலட்சங்களாகவே விளங்கியது ஆனல், இது 1973ஆம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் எல்லையளவால் உயர்ந்து காணப்பட்டது. தற்காலிக முற்பணங்கள் மாத்திரமல்லாமல, அரசாங்கம், அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைகள் ரூ. 556 இலட்சத்தால் உயர்வடைந்தது. இம்மூன்று காரணிகளாலும், சொத்துக்கள் உயர்வடைந்திராமைக்கு ரூ 754 இலட்சமான ஏனைய உள்நாட்டுச் சொத்துக்களிலும், கணக்குகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக அமைகிறது. மேலும், மத்திய வங்கியின் பன்னுட்டு ஒதுக்கானது ரூ. 604 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து. இது குறைக்கப்பட்டது. சிறப்பு எடுப்பனவுகள் உரிமைகளின் சொத்துக்களானது, ரூ. 61 இலட்சத்தால் அதிகரிக்கப்பட்டு, ரூ. 860 இலட்சமாகிய வேளையில், முந்திய காலங்களைப்போலவே, பணத்திலும், வெளிநாட்டு நிலுவைகளிலும் ஏற்பட்ட மாற்றம் பன்னுட்டு ஒதுக்கானது வீழ்ச்சியடைவதற்கு முற்றிலும் காரணமாகிறது. பன்னுட்டு நாணய நிதியினல், விதிக்கப்பட்டவாறு, மீளவமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் கூடியளவில் தேவைப்பட்டதுடன் இந்நிதியில் சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் நாளாந்த சராசரி ஒதுக்கீடுகளில் 30% பயன்படாதிருத்தல் வேண்டும் இதற்கு 1974இல் அடிக்கடி ஏற்பட்ட மீளிணைப்புகள் காரணமாக இலங்கை ரூபாயின் செலாவணிப் பெறுமதியின் மாற்றமும் ஓரளவு காரணமாயிருந்தது

மொத்தக்கடன்களைப் பொறுத்தவரையில், உயர்ந்தளவான வைப்புக்களின் அளவுகள் இருந்தமையும், நாணய வழங்கல் அதிகரித்தமையும், பெரிதளவான மாற்றம் ஏற்படுவதற்குக் காரணமாயிற்று வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்குக் மிக முக்கியமான காரணி, பன்னுட்டு நாணய நிதியிலிருந்து பெற்ற எடுப்பனவுகளின் தேறிய அதிகரிப்பாகும். இவ்வதிகரிப்பானது, ரூ. 1642 இலட்ச அதிகரிப்புக்குக் காரணமாகியது. இது பெருமளவுக்கு ''எண்ணெய்ச் சலுகை''யின் கீழான எடுப்பனவுகளாகும். பன்னுட்டு நிறுவனங்களின், வெளிநாட்டு அரசாங்கங்களின் ரூ. 2016 இலட்சங்கொண்ட வைப்புக்களின் அதிகரிப்பு மாத்திரமல்லாமல் அரசாங்கத்தின் வைப்புக்களும், ''ஏனையவை'' என்ற தலைப்பின் கீழான பகுதியும் ரூ 400 இலட்சத்தால் அதிகரித்தது. மறுபுறத்தில், வர்த்தக வங்கிகள், அரசாங்க முகவர்கள், நிறுவனங்கள் ஆகியவற்றினல் கொண்டிருந்த வைப்புக்களின் அளவு மாற்றமும் ரூ. 782 இலட்சங்களால் வீழ்ச்சியடையக் காரணமாயிற்று. இம்மாற்றங்களினல் ஏற்பட்ட தேறிய விளைவென்னவெனில், மத்திய வங்கியினல் வைத்திருக்கப்பட்ட வைப்புக்களின் அளவு ரூ. 1634 இலட்சமாக அதிகரித்தது. மத்திய வங்கியின் நாணய வழங்கலும், ரூ. 1760 இலட்சத்தால் அதிகரித்தது. 1973ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, இது ரூ. 2033 இலட்சமாகும். பொறுப்புக்களின் மற்றைய விரிவாக்கம் ரூ. 530 இலட்சமாக ஏனைய பொறுப்புக்களின் வளர்ச்சியும், வெளிநாட்டுக் கடன்களின் தொகையான ரூ. 167 இலட்சத்துடன் ரூ. 10 இலட்ச வளர்ச்சியைக் கொண்ட மூலதனக் கணக்குகள் வழிகூறுகிறது.

1973இல் வழங்கப்பட்ட ரூ. 121 இலட்சத்திற்கு மாறாக மத்திய வங்கியின் மத்திய நீண்ட தவணை கொடுகடன் நிதியத்தின் கீழ் வழங்கப்பட்ட மீள நிதியாக்க கடன்கள் ரூ 89 இலட்சமாகும். இதில், தேயிலைத் தொழிற் நவீன மாக்கல் திட்டத்தின்கீழ் கடன்கள் ரூ 59 இலட்சமாக அமைய, கைத்தொழில் வேளாண்மைக்கான கடன்கள் முறையே ரூ. 9.5 இலட்சமாகவும், ரூ. 50,000 ஆகவும் அமைகின்றன. தேயிலைத் தொழிற்சாலை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் பெரும்பாலான கடன்கள் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கைத் தொழில், வேளாண்மைத் தேவைகளுக்கான கடன்கள் முறையே அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கும், அரச ஈட்டு வங்கிக்கும் வழங்கப்பட்டன. இவ்விரு நிலையங்களுக்கும் வழங்கப்பட்ட மொத்தக்கடன் ரூ. 31 இலட்சத்தில் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு ரூ. 29 இலட்சம் வழங்கப்பட்டது.

ஆண்டின் தொடக்கப்பிரிவில் மத்திய வங்கி நாணயக் கொள்கையினது முக்கிய கருவிகளில் தொடர்ந்தும் தங்கியிருந்தது. இக்கொள்கை முன்னைய ஆண்டிலும் அதற்கு முன்பும் நடைமுறையில் இருந்தது. இவைகள் $6\frac{1}{2}$ சதவீத மான வங்கி வீதம், கேள்வி வைப்புக்களுக்கான குறைந்த ஒதுக்கு தேவை விகிதங்களான 12 சதவீதம், கால சேமிப்பு வைப்புகளுக்கு 5 சதவீதம், இது தவிர எந்த கேள்வி வைப்பு உயர்வுகளுக்கும் சிறப்பு ஒதுக்கு விகிதங்களான 28-38 சதவீதம் என்பனவற்றை உள்ளடக்கின. இன்றியமையாத தேவைகளுக் கல்லாத வற்றிற்கு அதிகரித்த கொடுகடன் வழங்குவதினின்றும் வங்கி கள் தடுக்கப்பட்டன.

இத்தகைய கொடுகடன் கட்டுப்பாடுகள் இருந்த போதிலும் ஆண்டின் தொடக்கப்பிரிவில் அரச கூட்டுத்தாபனங்களின் கொடுகடன் தேவைகளுக்கும் பருவ உற்பத்தி தேவைகளுக்கும் நிதியாக்கம் செய்வதற்கு கணிசமான அளவு வர்த்தகவங்கிகளின் கடன் வழங்கல்களின் விரிவாக்கத்திற்குக் கட்டாயமாயிற்று எனவே நடைமுறை வங்கி வீதங்களில் கணிசமானளவு தொகையை வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கி வழங்க நேர்ந்தது. அதே வேளை கொடுகடனிலும் பண நிரம்பலிலும் ஏற்பட்ட ஒரு மேலதிக வளர்ச்சியில் கட்டுப்பாட்டை ஏற் படுத்த வேண்டிய தேவையும் நன்கு உணரப்பட்டது. எனவே, மத்திய வங்கி 1974, மே 24ஆம் நாளின் கடன் வழங்கல் அளவிற்கு மேல் மிகாதவாறு உற்பத்தித் தேவைகளுக்கும் ஏற்றுமதி நிதியாக்கத்திற்கும் அல்லாத தேவை களுக்குக் கடன் வழங்கக்கூடாதெனவும் கேட்கப்பட்டன. இன்னும், ஆண்டிறுதி வரை இவ்வுச்சவரம்பு நடைமுறையிலுள்ளது.